பக்கங்கள்: எட்டு
Registered as a Newspaper




# உதயன்

விலை ரூ2/50




சுடர்: 4 சுக்கில ஹூ சித்திரை மீ 18 உ. திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 றமழான் பிறை 24 (01 - 05 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-123

# யாழ். நகரப் புனரமைப்பு இப்போதைக்கு இல்லை!

## நிலைமைக்கேற்ப பின்போட பிரிட்டிஷ் தூதுவர் இணக்கம்

— அலுவலகச் செய்தியாளர்: எஸ். ராஜ்குமார் —

யாழ்ப்பாணம், மே 1

யாழ்ப்பாண நகரத்தை முற்றிலும் புதிதாக திட்டமிட்டுப் புனரமைக்கும் பணி இப்போதைக்கு -- உடனடியாக -- நடக்கமாட்டாது.

யாழ்ப்பாண மாநகர சபை முன்வைத்த இந்தப் பணிக்கு உதவ முன்வந்த பிரிட்டிஷ் தூதுவர், நிலைமையை அனுசரிந்து அதற்கு ஏற்ப உதவியைப் பின்போட இணங்கிச் சென்றுள்ளதாக மிக நம்பிக்கையாக அறியப்படுகிறது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் ஆகிய இரண்டு நிறுவனங்களுக்கும் உடனடியாக நிதி உதவிகளை வழங்குவதற்கும் அவர் உறுதி அளித்துள்ளார்.

இலங்கைகான பிரிட்டிஷ் தூதுவர் திரு. டேவிட் கிளட்ஸ்ரன் தலைமையிலான பிரிட்டிஷ் அதிகாரிகள் குழு ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வந்திருந்தது.

யாழ்ப்பாண மாநகரத்தை புதிதாகத் திட்டமிட்டு நவீனமயப்படுத்தி புனரமைக்கும் பணி, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி, பல்கலைக்கழகம் ஆகியவற்றின் சில நவீனமயத் திட்டங்கள் என்பனவற்றை நேரில் அவதானித்துப் பரிசிலனை செய்யும் நோக்கத்துடனேயே பிரஸ்தாப குழு இங்கு வந்திருந்தது.

அதன் பொருட்டு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குச் சென்றதுடன் பாதிக்கப்பட்ட பல பகுதிகளையும் தூதுக்குழுவினர் பார்வையிட்டனர்.

அத்தோடு பிரஸ்தாப திட்டங்கள் குறித்த அதிகாரிகள் மக்கள் பிரமுகர்கள் ஆகியோரின் கருத்துக்களையும் குழுவினர் கேட்டறிந்தனர்.

அவ்வேளை, யாழ் நகரத்தை நவீனமயப்படுத்துவதை புதுக்கிப் புனரமைப்பதை, உடனடியாகச் செய்வது உசிதமில்லை என்றும் எனினும் அதற்கான உதவிகளை நிறுத்தாமல், பின்போட வேண்டும் என்றும் பலரும் கேட்டுக் கொண்டனர்.

அசம்பாவிதங்கள் முடிவுக்கு வராத நிலையில் புனரமைப்பு வேலைகளை ஆரம்பிப்பதற்குப் பதிலா பூரணமான வழமை நிலைக்குத் திரும்பிய பின்னரே செய்ய வேண்டும் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

அதனை ஏற்றுக்கொண்ட குழுவினர் யாழ் நகரப் புனரமைப்புக்கான திட்டத்தை பின்போட விருப்பம் தெரிவித்தனர்.

எனினும் அவர்கள் இம் மாதம் 7 ஆம் திகதி மீண்டும் இங்கு வரும் போது நகரப் புனரமைப்புக்கான பதிப்பீடுகளையும் பூர்வாங்க ஏற்பாடுகளையும் ஆராய்வர்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி, பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு உடனடியாக உதவுவது பற்றியும் அப்போது இறுதி முடிவு எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ.9)

## யாழ். பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் கைது

யாழ்ப்பாணம், மே 1

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பயிலும் நான்கு மாணவ, மாணவிகள் நேற்று இந்திய அமைதிப்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

பல்கலைக்கழக பின் வீதியில் உள்ள ஒரு வீட்டில் இவர்கள் நால்வரும் தங்கி இருந்து படித்தவர்கள் என்று அறியப்படுகிறது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை அந்த வீட்டிற்கு வந்த இராணுவத்தினர் பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் நால்வரையும், மற்றும் இரு மாணவர்களையும் வீட்டு உரிமையாளரையும் சந்தேகத்தின்பேரில் கைது செய்து சென்றனர்.

முகாமைத்துவத் துறை இரண்டாம் வருட மாணவன் எஸ். கே. பிரபாகரன் (பருத்தித்துறை), கலைப்பீட இரண்டாம் வருட மாணவன் கே: சோதிதாஸ் (வேலணை), கலைப்பீட மூன்றும் வருட மாணவி விமலாம்பிகை (சாவகச்சேரி), கலைப்பீட மூன்றும் வருட மாணவி பி. இராஜராஜேஸ்வரி (பொலிகண்டி) ஆகியோரே கைதுசெய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் ஆவர்.

அதே வீட்டில் இருந்த உயர்தர வகுப்பு மாணவர்கள் எனச் சொல்லப்படும் ராஜசேகர், பாலசிங்கம் ஆகியோரும் கைதுசெய்யப்பட்டனர். (அ)

## திருநெல்வேலியில் மோதல்; இளைஞர் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், மே 1

நேற்றுக் காலை சுமார் 9.15 மணியளவில் திருநெல்வேலி, [illegible] மோதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

இந்த மோதலின் போது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சுரேஷ்குமார் (வரதப்பா) சயனைட் உட்கொண்டு மரணமானார்.

இவர் தையிட்டியைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பிஸ்தாப இளைஞரின் சடலம் அமைதிப்படையினரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

இவருக்கு அஞ்சலி தெரிவித்து தமிழீழ விடுதலைப்புலிகள் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டனர். (ஒ-9)

## யாழ்ப்பாண நகரில் 4 மே தினக் கூட்டங்கள்

### ஊர்வலங்களுக்கு ஏற்பாடில்லை

யாழ்ப்பாணம், மே 01

யாழ்ப்பாண நகரத்தில் இன்று நான்கு இடங்களில் மேதினக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன. ஊர்வலங்கள் எதற்கும் ஏற்பாடுசெய்யப்படவில்லை.

ஈழமக்கள் புரட்சிகர முன்னணி ஈழத் தொழிற்சங்க சம்மேளனம் ஆகியன இணைந்து நடத்தும் மேதினக் கூட்டம் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் திரு. வி.ஏ, கந்தசாமி கூட்டத்துக்கு தலைமை வகிப்பார்.

இக்கூட்டத்தில் பல பிரதான தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளும் ஈ. ம. பு. வி. முன்னணியின் முக்கிய தலைவர்களும் உரையாற்றுவர்.

இலங்கைத் தொழிற்சங்க சம்மேளத்தின் மேதினக் கூட்டம் நாவாந்துறை செ.ன். நிக்கலஸ் சனசமூக நிலையத்தில் காலை பத்து மணிக்கு ஆரம்பமாகும்.

இடது கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டம் யாழ் ஸ்ரான்லி வீதி பட்டப்படிப்புக் கல்லூரியில் இன்று காலை நடைபெறும்,

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மேதினக் கூட்டம் பலாலி வீதியிலுள்ள பொன் குமாரசாமி நூலக மண்டபத்தில் காலை பத்து மணிக்கு நடைபெறும். (அ-க)

## மேலும் 25 தமிழ் கைதிகள் சில தினங்களில் விடுதலை

கொழும்பு, மே 1

இன்னும் சில தினங்களில் மேலும் 25 தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய அரசு தீர்மானித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகல, ஈரோஸ் தலைவர்களில் ஒருவரான சங்கர் ராஜு, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பரராஜசிங்கம் ஆகியோரிடம் இது குறித்து தெரிவித்தார்.

திரு. சங்கர் ராஜுவும் திரு. பரராஜசிங்கமும் திரு. ஆட்டிகலையை இது சம்பந்தமாக நேரிற் சந்தித்துப் பேசினர்.

விடுதலை செய்யப்படுவோர் ஐவர் ஐவராகவே விடுவிக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## இறைச்சிக் கடைகளை மூட புலிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 1

இறைச்சிக் கடைகளை மூடுமாறு யாழ் /மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் விடுத்துள்ள வேண்டுகோளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கேட்டிருக்கிறது.

இது தொடர்பாக ''நம்மை நாமே காப்போம்'' என்ற தலைப்பில் அந்த இயக்கம் விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழீழப் பிரதேசத்தில் எமது மக்களின் அன்றாட வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டிருப்பது யாவரும் அறிந்ததொன்றே. ஆதிக்க வர்க்கத்தினர் எமது மக்களை ஒருபுறம் கொன்று குவித்துக் கொண்டு, மறுபுறத்தில் உலகை ஏமாற்ற தமது சிவில் நிர்வாகத்தை எமது மக்கள் மீது திணித்து சட்டம் ஒழுங்கு என்ற ரீதியில் எமது மக்கள் மீது மேலும் ஓர் அடக்கு முறையை திணிப்பதை எதிர்க்கும் முகமாகவே, சிவில் நிர்வாகத் தடையை நாம் ஏற்படுத்தினோம் என்பது தெரிந்ததொன்றே.

நாம் சிவில் நிர்வாகத் தடையை மேற்கொண்ட போதிலும் அதில் மக்களின் அத்தியாவசியத் தேவைகளான சுகாதாரம், உணவு,

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரப் பரவல் விடயத்தில் மட்டக்களப்பு மாநாட்டில் பிணக்கு

### அமைச்சரின் கூற்றுல் ஐவர் வெளிநடப்பு

- மட்டக்களப்பு மாவட்டச் செய்தியாளர் -

மட்டக்களப்பு மே 1

மட்டக்களப்பில் நேற்று மத்திய அமைச்சர்கள் கலந்து கொண்ட மாநாட்டில், அதிகாரப் பரவல் விடயத்தில் பிணக்கு ஏற்பட்டது அதனால் மாநாட்டில் கலந்து கொண்ட வடக்கு - கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஐவர் வெளிநடப்புச் செய்தனர்.

இது பற்றிய விபரம் வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் புனரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் சம்பந்தமாக ஆராய மாநாடு ஒன்று செயலகத்தில் நேற்று நடத்தப்பட்டது.

அரச அதிபர் திரு. கே. செல்வரத்தினம் மாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன, கடற்றொழில் அமைச்சர் மைக்கல் பெரேரா, புனர்வாழ்வு நீதி அமைச்சர் வின்சன்ட் பெரெரா, உள்நாட்டலுவல்கள் மாகாண சபை அமைச்சர் யு. பி. விஜேகூன், காணி, நீர்ப்பாசன அமைச்சர் பி. தயாரத்தின ஆகியோரும்-

மட்டக்களப்பு எம். பிக்களான திரு. கருணாகரன், திரு. பிரின்ஸ் காசிநாதர், திரு. சாம் தம்பிமுத்து ஆகியோரும்-

வடக்கு - கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான திருவாளர்கள் எஸ். கணேசமூர்த்தி, கே. விஞயகமூர்த்தி, இ. பத்மநாதன், என். நேசராஜா, எஸ். புஷ்பராசா [ஈ. பி. ஆர். எல். எப்] ஐ. தே. க. உறுப்பினரான மஷீர் மௌலானா ஆகியோரும் - இம் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் எவரும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்
01—05—1989
சித்திரை — 18
சுபநேரம்:
12.57 முதல் 01.27 வரை
ராகுகாலம்:
07.27 முதல் 08.57 வரை

## நாலாயிரம் பிக்குகள் இன்று மே தின ஊர்வலம்

கொழும்பு, மே 1

எக்ஸத் லங்கா ஜனதா கட்சி (ஈ. எல். ஜே. பி.] இன்று நடத்தும் மேதின ஊர்வலத்தில் 4 ஆயிரம் பௌத்த பிக்குகள் கலந்துகொள்வதற்கு ஜனதிபதி பிரேமதாஸ அங்கீகாரமளித்து இருக்கிறார்.

ஆனந்தாக் கல்லூரி சந்தியில் இருந்து கொட்டா வீதி மைதானத்திக்கு இந்த ஊர்வலம் செல்லும்.

பௌத்த பிக்குகள் பங்குபற்றும் காரணத்துக்காக ஊர்வலம் செல்லும் பாதை நெடுகிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த பௌத்த பிக்குகள் ஊர்வலத்தில் கலந்துகோள்ள மக்கள் ஐக்கிய முன்னணி மறுத்துவிட்டது. (ஒ-எ)

### மட்டக்களப்பில்

மட்டக்களப்பு, மே 1

ஈ. பி. ஆர். எல். எப் இன் மேதினக் கூட்டம் இன்று மட்டக்களப்பிலும் நடைபெறுகிறது.

ஈ. பி. ஆர். எல். எப். செயலாளர் நாயகம் திரு. க. பத்மநாபா உட்பட மாகாணசபை அமைச்சர்கள் கூட்டத்தில் உரைநிகழ்த்துவார்கள். (இ-21)

## அச்சுவேலி புனித சூசையப்பர் திருநாள் இன்று

யாழ்ப்பாணம், மே 1

அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத் திருநாள் இன்று முதலாம் திகதி வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

காலை 6.30 மணிக்கு திருநாள் கூட்டுப் பலியுடன் ஆராதனைகள் நிறைவு பெறுகின்றன. (சிறப்பிதழ் 5 ஆம் பக்கத்தில்) (ஒ)

## ஈ.பி.ஜ. முன்னணிக்கு அரசியல் கட்சி அங்கீகாரம் இன்று அறிவிக்கப்படக் கூடும்

யாழ்ப்பாணம், மே 1

ஈரோஸ் இயக்கத்தின் அரசியல் பிரிவான ஈழவர் ஜனநாயக முன்னணியை அரசியல் கட்சியாக அங்கீகரிப்பதாக வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு மே தினத்தை முன்னிட்டு வெளியிடப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஈரோஸ் பிரதிநிதிகள் அண்மையில் கொழும்பில் மேற்கொண்ட பேச்சுக்களை அடுத்தே இந்த உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

ஈழவர் ஜனநாயகமுன்னணியின் கட்சிச்சின்னமாக [illegible] சின்னத்தை வழங்கவும் முடிவாகியுள்ளதாம்.

இலங்கையின் நாடாளுமன்றச் சரித்திரத்தில் சுயேச்சைக் குழு ஒன்று அதிக எண்ணிக்கையான உறுப்பினர்களுடன் வெற்றி பெற்றதோ, வெற்றி பெற்ற குழு நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்ததோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அதனால் சட்டரீதியாக ஏற்படக்கூடிய நெருக்கடியைத் தவிர்ப்பதற்காகவே ஈழவர் ஜனநாயக முன்னணியை இடைப்பட்ட காலத்தில் அங்கீகரிக்கப்படவுள்ளதாகச் சொல்லப்படுகிறது. (அ-9)

## செங்கலடியில் குண்டு வெடிப்பு; ஒருவர் பலி

மட்டக்களப்பு, மே 1

செங்கலடி ரெலோ அலுவலகத்துக்கு முன்னால் இடம் பெற்ற சைக்கிள் குண்டு வெடிப்பில் ஒருவர் கொல்லப்பட்டார், ஐவர் காயமடைந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இச்சம்பவம் நிகழ்ந்தது.

இறந்தவர் ஏறுவூரைச் சேர்ந்த உமா லெவ்வை (வயது 33). [இ-21]

## மாணவர் போராட்டத்தால் கிழக்குப் பல்கலைக்கழகம் 4 ஆவது தினமாக மூடப்பட்டுள்ளது

மட்டக்களப்பு, மே 01

மாணவர்களின் மறியல் போராட்டம் காரணமாக கிழக்குப் பல்கலைக்கழகம் நேற்று நான்காவது தினமாக மூடப்பட்டிருந்து.

உபவேந்தர் வாசஸ்தலத்தில் தங்கி இருக்கும் மாணவர்கள் விருந்தினர் விடுதியைப் பூட்டி திறப்பைத் தம்வசம் வைத்துள்ளனர்-

பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமான மினிபஸ் ஒன்றையும் பறிமுதல் செய்துள்ளனர்.

வதிவிட வசதி கோரி வர்த்தக முகாமைத்துவ கலைப்பீட மாணவர்களால் இப் போராட்டம் நடத்தப்படுகிறது.

மாணவர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டால் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்த முடியும் என்று பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக துணை வேந்தர் திரு. கே. பி. அருள்பிரகாசம் தற்போது வெளிநாட்டில் தங்கி உள்ளார். [இ-21]

## பருத்தித்துறைப் பகுதியில் ஊரடங்கும் தேடுதலும்!

வல்வெட்டித்துறை, மே 01

பருத்தித்துறைப் பகுதி நேற்றுக் காலை திடீரென சுற்றிவளைக்கப்பட்டது. அப் பகுதியில் நேற்றுக் காலை 5 மணி முதல் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கும் அமுல் செய்யப்பட்டது நண்பகல் 12 மணி வரை ஊரடங்கு நீடித்தது.

இவ்வேளையில் பருத்தித்துறையின் [illegible] பகுதிகளில் வெடிச்சத்தங்களும் கேட்டன. சம்பவங்கள் பற்றிய விவரங்கள் உடனடியாகத் தெரியவில்லை.

தேடுதலின்போது கைதானவர்கள் பருத்தித்துறை பழைய பஸ் நிலையத்துக்குக் கூட்டிச் செல்லப்பட்டு, பஸ் ஒன்றின் மூலம் புலோலி முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இவர்கள் தாக்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டது.

இச்செய்தி எழுதும்போது சிலர் விடுவிக்கப்பட்டிருந்தனர். மற்றையோர் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். அனைவரும் விடுவிக்கப்பட

[8 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி




மே தினம் எல்லே... தொழிலாளியன்றை உரிமையள் மட்டுமென்ன எல்லாற்றை உரிமையளும் கிடைக்கபிரார்த் இப்போமே......!

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் சொந்தப் பாவிப்பில் உள்ள 26 சிறி தொடரிலக்கமுடைய நோமல் லொறி உடனடி விற்பனைக்கு உள்ளது. தொடர்பு: 3 நிக்கிலஸ், கைத்தொழில் பேட்டை வீதி, அச்சுவேலி. (305

Technics, Stereo, Double, Cassette Deck, RS-T 20 மற்றும் Amplifier Su - 50 Stereo SH-8020 விற்பனைக்கு உண்டு. தொடர்பு: M. பன்னீர்ச் செல்வம், அம்பலவாணர்வீதி, உடுவில், சுன்னாகம். [316]

வீடியோ படப்பிடிப்புக்கு பாவிக்கும் ஒறிஜினல் Furi வீடியோக் கசற்றுக்கள் எம்மிடம் விற்பனையாகின்றன. மற்றும் சகல விதமான வீடியோ Heads உம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க. எவர்விஷன் 21A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (C/ 2411)

சுருக்குக்கேற் 8' உயரம் 9' அகலம் இருபாதி) இரும்பு, ஜன்னல், கிறில் (5 1/4' உயரம், 11' நீளம் 8' நீளம் 5 1/4' உயரம்)இரண்டு மற்றும் தகரம் நிலை வேம்பு, பாலை) கட்டில் பழைய மரங்கள் ஆகியன மலிவான விலையில் உண்டு. இடம்: சின்னவி கந்தசாமி, நவாலி வடக்கு, நாச்சிமார் கோவிலடி. [10774]

சுத்தமான ஜேர்மன் சப் போட் நாய்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. சில்வர்கிறே அன் Black Tail. 386, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [107^6]

### வீடு விற்பனைக்கு

கொக்குவில் பிரம்படியில் யாழ் பல்கலைக்கழகத்துக்கும் யாழ் தொழில்நுட்பக் கல்லூரிக்கும் அண்மையில் ஒரு பரப்புக் காணியில் நாலு பக்கமும் மதிலும் தனிக்கிணறும் கொண்ட புதியவீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மு. கந்தையா, 10/4, அம்பகர் வீதி, பிரம்படி, கொக்குவில். [325]

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Dekalb) [Lohmann) பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், கறுப்பு சேவல் குஞ்சுகள், [Cobb] புறொயிலர் குஞ்சுகள் [2.5 89] செவ்வாய்க் கிழமை குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும். கூடுதலாக எடுப்பவர்களுக்கு சலுகையுண்டு. முன்கூட்டியே பதிவுசெய்க. இல 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்] (10692)

### கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

[Dekalb] பிறவுண் சேவல் குஞ்சு 2ஆம் 3ஆம் திகதிகளில் விநியோகிக்கப்படும். 100 குஞ்சுகளுக்குமேல் எடுப்பவர்களுக்கு விலை ரூபா 4/- முன் கூட்டியேபதிவு செய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகாமையில்) (10776)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hyline புறொயிலர் ஒருநாள் பேட்டுக்குஞ்சுகள் கறுப்பு சிவப்பு வெள்ளை 07-05-1989, 09-05-1989 விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. Lucky Farm House, Mathavady Lane, Thirunelvely [10779]

### தேவை

தபாற் கந்தோர் வேலைகளில் நன்கு தேர்ச்சிபெற்றவரும் ஆங்கிலத்திலும், தமிழிலும் தட்டச்சு சுருக்கெழுத்துத் தெரிந்த பெண் ஒருவர் தேவை. மாநகர எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. மே மாதம் 02ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9. 00 மணியளவில் நேரில் வரவும்: கிலானி முகவர் தபால் நிலையம், 19, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [313]

### தேவை

மெழுகுதிரி, கர்பூரம் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு பெண்பிள்ளைகள் தேவை. நேரில் வரவும். V. அரியரெட்ணம், 151 [345], கோவில்வீதி நல்லூர், யாழ்ப்பாணம். (நல்லூர் கோவில் பின்பக்கம்) (334)

வெல்டிங் வேலைகள் தெரிந்தவர்கள் தேவை. உடன் தொடர்புகொள்ளவும். New Decants கேட்ஸ் வேக்ஸ், 23. பிள்ளையார் கோவில் லேன், முஸ்லீம் கொலிச் றோட், யாழ்ப்பாணம். [லேடன் கொம்பனிக்கு அண்மையில்] (327)

### பேக்கரி வேலை ஆட்கள் தேவை

பேக்கரி வேலைகு நல்ல அனுபவம் உள்ள ஆட்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். சி. சிவலிங்கம், திநேஷ் பேக்கரி மாக்கட், மானிப்பாய். (10789)

### மணமகன் தேவை

பட்டதாரி 37 வயதுள்ள கொழும்பில் ஆசிரியராக கடமை புரியும் இந்துவேளாள மணமகளுக்கு மணமகன் தேவை. வெளிநாடு செல்வதற்கு வசதி உண்டு. நல்ல சீதனமும் கொடுக்கப்படும். தொடர்பு: 504, C/o உதயன், யாழ்ப்பாணம். (333)

### மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விவாகரத்து செய்து கொண்ட 53 வயது பட்டதாரி ஆசிரியருக்கு மணமகள்தேவை. பட்டதாரி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியையாய் இருக்க வேண்டும். விவாகரத்து செய்து கொண்ட அல்லது விதவைகளும் விண்ணப்பிக்கலாம். வயது 42—44க்கும் இடைப்பட்டதாக இருக்கவேண்டும். விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். 54, C/o உதயன். [10781]

### தவறிவிட்டது

நடராசா சொர்ணலிங்கம், டஞ்சலிங்கம் விஜயகுமாரி ஆகிய இரு அடையாள அட்டைகள். இல: 652862489V தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் அல்லது பணிக்குரல் ஒலிபரப்பு நிலையத்தில் ஒப்படைக்கவும். (10784)

என்றிரேச் குணரட்ணம் ஆகிய எனது அடையாள அட்டை இல; 6922526-3V 13-04-89 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் அல்லது Jaffna College வட்டுக்கோட்டையில் ஒப்படைக்கவும். (10783]

### கல்வி

G.C.E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தி யெய்யாதவர்களுக்கும் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 22 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் விசேட சித்திக்கு குறைந்த காலத்தில் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, ஈச்சேரி கிழக்கு ஒழுங்கை, கண்டிக்குளி. [328]

### பிரயோக கணிதம்

நிலையியல் பகுதி 1 பயிற்சி நூல் வெளிவந்து விட்டது. 1990 இற்கும் அதற்குப் பிற்பட்ட பரீட்சைகளுக்குமான புதிய பாடத்திட்டத்திற்கமைந்தது. யாழ் முன்னணிக் கல்லூரி ஆசிரியர்களால் சிபார்சு செய்யப்பட்ட நூல் ஆசிரியர்: சி. துரையப்பா St. John's College, யாழ்ப்பாணம். (311)

### வலம்புரிச்சங்கு

இல்லங்களில் லட்சுமிகரம் நிலவுவதற்கும் ஆலயங்களில் பூசை ஆராதனைகளுக்கும் வியாபார நிலையங்களில் வளங்கொழிப்பதற்கும் உகந்த வலம்புரிச்சங்கு விற்பனைக்கு உள்ளது. தொடர்பு கொள்க. தாஸ். 188புதுச்செட்டித்தெருகொழும்பு—13. (331)

### விற்பனைக்கு

ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட Un-Registered Chaly, C90 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. Our Lady Stores 601, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [10777]

### மயூரதி வெளியீடுகள்

G. C. E (O/L) முன்மாதிரி வினாத்தாள்கள் மயூரதி வெளியீடு- 4, வெளியீடு -5, ஆண்டு 10, ஆண்டு 8, கணிதம் பல்தேர்வு வினாக்கள்' சகலபுத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றன. சிறந்த கணித நூல்களுக்கு மயூரதி வெளியீடுகள். (10602]

### GERMAN LANGUAGE BASIC I

ஜேர்மனியில் மேற்படிப்பைதொடர புதிய வகுப்புகள் 02-05 1989 4, p.m ஆரம்பம். பரீட்சைகள் கொழும்பு, ஜேர்மன் கலாசார நிலையத்தினால் நடத்தப்படும் ககைமைகள் G C.E. O/L ஐந்துபாடம் திறமைச்சித்தி [C] இருக்க வேண்டும். G. C. E. A/L நாலுபாடமும் சித்தி[S]இருத்தல் வேண்டும். தொடர்பு Director of Studies German Culture Association., 33, Kandy Road Jaffna. [2420)

### விற்பனை

NIKOH-EM CANON-T50 சமருக்கள் Flash உடன் விற்பனைக்கு உண்டு. இல. 4, கவாட்ஸ் ஒழுங்கை, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். (340]

மின்சாரமும் மண்ணெண்ணையும் உபயோகமுள்ள 300 முட்டைகள் அடங்கிய குஞ்சு பொரிக்கும் இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: Lucky Farm House, Mathavady Lane, Thirunelvely. 10780

### வகுப்பு

'A/L 91 இரசாயனம் 108 Brown Road A/L 91 அடிப்படை இரசாயனம் முதல் வகுப்பு ஆரம்பம். ஆசிரியர் சத்தீஸ் பிரிவு I ஆரம்பம் 2-5-89 செவ்வாய் 6.30 a.m (செவ்வாய், வியாழன் 6.30 a.m) பிரிவுII ஆரம்பம் 30-4-89 ஞாயிறு 11a.m. (சனி ஞாயிறு 11 a.m.) (261)

### அச்சகம் விற்பனைக்கு

மிகவும்சிறந்த நிலையிலுள்ள ஒட்லி சிலிண்டர் அச்சியந்திரம் புதிய எழுத்துக்கள், கேஸ்கள் மற்றும் அச்சக சாதனங்கள்உடன் விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும். முந்துபவர்களுக்கே முதலிடம். முகாமையாளர் 'மலரகம்' ஏழாலை வடக்கு, ஏழாலை. அல்லது தனலட்சுமி புத்தகசாலை, சுன்னாகம். (330)

## அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

திருநெல்வேலி சைவப் பாடசாலையில் எழுந்தருளி இருக்கும் ஞான வைரவர் கோயில் திருப்பணிக்காக வைரவர் கோயில் இளம் தொண்டர் கழகத்தினல் நடாத்தப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு.

| | | இலக்கம் |
|---|---|---|
| 1 ஆம் பரிசு | வானொலிப் பெட்டி | — 490 |
| 2 ஆம் பரிசு | மின்னழுத்தி | — 1944 |
| 3 ஆம் பரிசு | சுவர் மணிக்கூடு | — 1751 |

ஆறுதற் பரிசுகள்

1) 1322 2) 1022 3) 394 4) 187 5) 99 6) 102

வைரவர் கோயில் இளம் தொண்டர் கழகம், திருநெல்வேலி.

[10794]

குமார கோவில் வீதி, காங்கேசன்துறையில் அமைந்திருக்கும்

## குமார ஆலயத்தில்

பாலஸ்தாபன அபிஷேகம் நடைபெறுவதையொட்டி

## வேலுப்பிள்ளை பார்வதிப்பிள்ளையை நினைவு கூர்தல்



நீங்கள் இந்த ஆலயத்தை 50 ஆண்டுகாலமாக பரிபாலித்து வந்துள்ளீர்கள் 1954ஆம் ஆண்டு மேற்கு, வாசலாக இருந்த கோவிலை கிழக்கு வாசலாக மாற்றி கும்பாபிஷேகம் செய்த அன்று தொட்டு சிவதொண்டிலும் ஆலய வளர்ச்சியிலும் முழுமையாக உங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்து 1967 இல் சிவனடி சேர்ந்தீர்கள்.

உங்கள் பேரன் தெய்வேந்திரன் தனது தாயின் நினைவாக கட்டடம் இல்லாது கோவிலுக்குள் வைத்துப் பூசை செய்து வரும் பிள்ளையாருக்கு ஓர் கோயில் கட்டி முடியும் நேரத்தில் தாய்க் கோவிலுக்கு தூபி கட்டி, கலசம் வைத்து கும்பாபிஷேகம் செய்யாது, பரிவாரத்துக்குக் கலசம் வைத்து கும்பாபிஷேகம் செய்யக் கூடாது என்று பெரியோர்கள்கூறிய காரணத்தால்

இன்று 01-05-89 இல் மேற்படி ஆலயத்தின் திருப்பணி வேலைகளைத் தொடங்குவதற்காக காலை 6. 30 மணி தொடக்கம் 11. 02 மணிவரை வரும் சுப நேரத்தில் பாலஸ்தாபன அபிஷேகம் நிகழவுள்ளது.

இந்தப்புனிதமான தினத்தில் நீங்கள் செய்த தொண்டுகளை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கின்றோம்.

வே. முருகுப்பிள்ளை, குடும்பத்தினர்.

[338]

### மாணவருக்கு எதிரான வழக்கு தள்ளுபடி

பல்கலைக்கழக மாணவர்கள் மூவர் மீது மட்டக்களப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

1987 ஆம் ஆண்டு செப்டம்பர் 9 ஆம் திகதி காத்தான்குடியில் சட்டவிரோதமாக கூடியது, ஜனுப் எம். வை ஹிஸ்புல்லாஹ் கைத்தாக்கி சிறுகாயம் விளைவித்தது போன்ற குற்றச்சாட்டுகளை மட்டக்களப்பு பொலீஸ் இம்மூவர் மீது சுமத்தியிருந்தனர்.

வழக்குத் தாக்கல் செய்ய முடியாத நிலை என பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டதை அடுத்து மாவட்டநீதிபதி ஜனுப் எம். சி. காரியப்பர் வழக்கை தள்ளுபடி செய்தார்.

## ரூ.2 கோடி வரை கடன்

கூட்டுறவு மொத்தவிற்பனவு நிலையம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கும் கடன் தொகையை இரண்டு கோடி ரூபா வரை அதிகரித்துள்ளது.

கடந்த காலங்களில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒரு கோடியே 20 லட்சம் ரூபா வரையும் கடனாக வழங்கப் பட்டு வந்தன

### வைத்தியசாலையில் கட்டாக்காலிகள்

புலோலி மந்திகை வைத்தியசாலையின் சுற்றுவேலி பராமரிப்பின்றி இருப்பதால் கட்டாக்காலி ஆடுமாடுகள் வைத்தியசாலை வளவிற்குள் செல்கின்றன. சிலசமயம் நோயாளர் வார்ட்டுகளுக்குள்ளும் சேன்று அசுத்தப்படுத்துகின்றன. [க-160

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### இராமு கதிரவேலு (கண்டு)

மலர்வு: 22 - 07 - 1935 உதிர்வு: 01 - 04 - 1989

அன்பின் திருவுருவமாய், பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய், உற்றருக்கு சேவகனாய், எங்கள் இதய ஒளிவிளக்காய் எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்ட அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், பல வழிகளில் உதவி நல்கிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். அத்துடன் 30-4-1989 ஞாயிற்றுக்கிழமை அந்தியேட்டிக் கிரியைகள் எமது இல்லத்தில் நடைபெற்றன என்பதை அறியத் தருகின்றோம்.

மனைவி, மக்கள், சகோதரர்கள், மருமக்கள், மைத்துனர்கள், பெறுமக்கள்;

கோவில் கடவை, துன்னாலை தெற்கு. கரவெட்டி. (263)

# OUR NEW RELEASE

## ★ எமது புதிய வெளியீடுகள் ★

| Films | Cast | |
|---|---|---|
| 1. Friday the 13th | Betsy Palmer | Horror |
| 2. Friday the 13th Part 2 | Amy Steel | '' |
| 3. Friday the 13th '' 3 | Danakimmell | '' |
| 4. Friday the 13th '' 4 | Kimberly beck | '' |
| 5. Friday the 13th '' 5 | Melanie kinnaman | '' |
| 6. Friday the 13th '' 6 | Thom mathews | '' |
| 7. Carry on Henry | Kenath williams | '' |
| 8. Carry on At your Convenience | '' | Comedy |
| 9. Carry on Doctor | '' | '' |
| 10. Carry on Again Doctor | '' | '' |
| 11. Carry on Girls | '' | '' |
| 12. Carry on Loving | '' | '' |
| 13. Carry on Matran | '' | '' |
| 14. Carry on Dick | '' | '' |
| 15. Carry on England | '' | '' |
| 16. Carry on Camping | '' | '' |
| 17. Carry on up the Khyber | '' | '' |
| 18. What a Carry on | '' | '' |
| 19. The Deer Hunter | Robert de Niro | Action |
| 20. Tiger Warsaw | Patrick swayze | '' |
| 21. An American Tail | | Cartoon |
| 22. 976 Evil | Stephen Geoffreys | Horror |
| 23. The Dragula Saga | Lazafuskaplan | '' |
| 24. Count Dragula Great Love | Pacil nasihy | '' |
| 25. The Commander | Leevan Celife | War |
| 26. Cry Freedom | | Action |
| 27. The Pack | Joe Don Baker | Story |
| 28. Graveyard Shift | Silvio oliviero | Horror |
| 29. The Sherff and the Satellite kid | Bud Spencer | Comedy |
| 30. Fire Walker | Chuck Norris | Action |
| 31. Crime Busters | Bud Spencer | Comedy |
| 32. Escape From Sobibor | Alan Arkin | War |
| 33. Fawlty Towers | B. B. C | Comedy |
| 34. Yes Prime Minister | B. B. C | |
| 35. The Sea Wolves | Roger Moor | |
| ★ Michale Jacson | World Tour & Stage Program | |
| ★ Nelson Mandela Concert | June 1988 | |

# NALLUR VIDEO CENTRE

No. 19, Murugesar Lane, NALLUR.

## நல்லூர் வீடியோ சென்ரர்

19, முருகேசர் லேன், நல்லூர்.

[சி-2247]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மேதினி எங்கும் வாழும் தொழிலாளரின் உரிமைத் திருநாள் இன்று

## மேதினம் தொழிலாளர் சுபீட்சவாழ்வின் உதய தாரகையாக ஒளிரட்டும்

**ஏ - எஸ் - லோறன்ஸ்**

மே தினம் தொழிலாளி வர்க்கத்தின் பொன்னுள். உலகின் உயிர் நாடிகளாக விளங்கும் தொழிலாளர்கள் ஒன்றுகூடி தங்கள் சாதனைகளையும் பலத்தையும் பிரஸ்தாபித்து, ஐக்கியத்தையும் சகோதரத்துவத்தையும் நிலைநாட்டும் நாள்.

தொழிலாளர்கள் அடக்கப்பட்ட, மறுக்கப்பட்ட தமது அடிப்படை உரிமைகளை வகைகண்டு ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் மூலம் அவற்றை உலகுக்கு உணர்த்தி இந்த உரிமைகளை அடைவதற்குத் திட சங்கற்பம் பூணும் பெருநாள் மே தினம்.

அடிப்படை உரிமைகளை மறுத்து வேலைத் தலங்களில் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யாது தொழிலாளியின் உதிரத்தையே உறிஞ்சி இலாபம் ஈட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ள முதலாளி வர்க்கத்தினருக்கு எதிராக அறப்போர் தொடுக்க ஆயத்தமாகும் நாள் மே தினம்.

மே தினம் தொழிலாளி வர்க்கத்தினரின் அயரா உழைப்பின் பயனாக அகில உலக ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட விடுமுறை நாள்.

இவ்வாண்டு மே தினம் தொழிலாளரின் சுபீட்ச வாழ்வின் உதய தாரகையாக ஒளிர்வதாக! சமுதாய நலனை மனதிற் கொண்டு தொழிலாளி தன் கடமையை ஆற்றுவானாக! பல்லாண்டுகளாகப் பல தியாகங்கள் புரிந்து அடைந்த உரிமைகளை அவன் பேணிக்காப்பானாக! தொழில் நிறுவனங்கள் தொழிலாளர்களின் நலனைச் சிந்தையிற் கொண்டு, காலத்துக்கேற்ற வகையில் தங்கள் திட்டங்களை மறு பரிசிலனை செய்து செயலாற்றுவதாக!

### கொடி சிவப்பான வரலாறு!

மேதினம் மேதினி எழுந்தது!
மேலவர் தொழிலாளர் என்றிட!
மேதினம் மேதினி எழுந்தத!
ஏதினி ஏழைகட் கிடரே!
நூறுண்டு கள் முன்பு சிக்காகோ
நகரத்தில் வெடித்தது புரட்சி
தோற்றூர்கள் பேராலைக் காரர்கள்
தொடர்ந்தது எட்டுமணி வேலைநாள்!
நாளொன்றில் பன்னிருமணி நேரங்கள்
நறுக்காக வேலைகொள் வரலாற்றை
நீளத்தில் அணிசேர்ந்த தொழிலாளர்
நீக்கிப் புது வரலாறு படைத்த நாள்!
தொழிலாளர் சிந்திய இரத்தத்தில்
தோய்ந்த வெண்கொடி சிவப்பான
அழியாத வரலாறு கூறும் நாள்
அகிலத்தில் நிலைத்திட்ட மேதினம்!

— நவாலியூர்க் கவிராயர்

### பாட்டாளிகள் தினம் மேதினமே

பாட்டாளி கள்தினம் மேதினமே - இந்தப்
பாரெங்கும் கொண்டாடும் மேதினமே
வாட்டமொ டஞ்ஞான்று வாழ்ந்தோர்க்கு - இன்று
வளவாழ் வளிப்பதும் மேதினமே

★ ★ ★

பாட்டாளி வர்க்கத்து மக்களே - இந்தப்
பாரினுக் கேமுது கென்பாவார்
பாட்டாளி கள்வாழ்வு ஓங்கிடவே - இந்தப்
பாருல சம்வாழ்வும் ஓங்கிடுமே.

★ ★ ★

சிக்காக்கோ நகரத்தில் அன்றொருநாள் - வெகு
சீராசத் தோன்றிய மேதினந்தான்
சிக்கலைப் போக்கியே மக்களுக்கு - நல்ல
சீர்த்தியைக் கொடுப்பது மேதினமே.

— கவியரசு வெண்பாமணி முருகசூரியன்

## நீண்ட தியாக வரலாற்றினூடாக வென்றெடுத்த உரிமைகளை பாதுகாப்பதில் இணைவோம்

**வண. கலாநிதி எஸ். ஜே. இம்மானுவேல்**

நீண்ட தியாக வரலாற்றினூடாக வென்றெடுத்த தொழிலாளர் உரிமைகளையும், தொழிலாளியின் மாண்பையும் முழு உலகமும் நினைவு கூரும் இந் நன் நாளில் எம் மாநில தொழிலாளர் சகலருடனும் இந் நடுநிலையமும் இணைந்து கொள்வதில் மகிழ்வடைகின்றது.

கடந்தகால போராட்டங்களினுல் வடக்கு, கிழக்கில் உள்ள சகல தொழிலாளர் அமைப்புக்களும் செயலிழந்துள்ளன. எனினும் சோர்வுறாது உயர்ந்த நோக்கோடும் மதிப்பீடுகளோடும் தங்களுடையவும், சமுதாயத்தினுடையவும் நன்மை கருதி மீளவும் செயல் நிறை குழுக்களாக தங்களை கட்டியெழுப்பதொழிலாள நண்பர்களை அழைக்கின்றோம்.

யாழ்ப்பாண நற் சமூக நடுநிலையம் விடுத்த மேதினச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

எமக்கு இடப்பட்ட அடிமைத்தன விலங்குகளிலிருந்து விடுபட நாம் பெரிதும் போராடிக்கொண்டிருக்கின்றோம்.

தமது எதிர்கால உறுதிப்பாட்டுக்கும் தொழில் நல வசதிகட்கும் சட்டரீதியான பாதுகாப்புக்கள் பலவற்றைத் தொழிலாளர் பெற்றதையிட்டு மகிழ்கின்றோம்.

அண்மைக்கால ஆயுதப் போராட்டங்களினுல் உயிரையோ, உழைக்கும் ஆற்றலையோ இழந்த தொழிலாளர்களில் தங்கியுள்ளோரையும் இத்தினத்தில் நினைவு கூருகின்றோம்.

இப்படி மேலும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் எழுச்சித்தினம் மே நாள்

**சார்ள்ஸ்**

சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் உரிமைத் தினமான மேதினம், தொழிலாளி வர்க்கத்தின் எழுச்சித் தினமாகும்.

அகிலம்பூராவும் பாட்டாளி வர்க்கத்தின் இந்த எழுச்சித் திருநாள் கொண்டாடப்படுகின்றது.

அன்று உதிரத்தைக்கொட்டி உழைக்கும் தொழிலாளிக்குப் போதிய ஊதியம் இடைக்க ★வில்லை. நாடொன்றுக்கு 16 மணிநேர வேலையைத் தொழிலாளி செய்யவேண்டி இருந்தது.

இதனை எதிர்த்துத்தான் அமெரிக்காவின் சிகாக்கோ நகரில் 1886ஆம் ஆண்டு மாபெரும் தொழிலாளர் போராட்டம் வெடித்தது.

எட்டுமணிநேர வேலை கோரியும் உரிமைகளுக்கான உத்தரவாதங்களைக் கோரியும் தொழிலாளி வர்க்கம் போராடியது. இந்தப்போராட்டத்தின் விளைவாக எட்டுத் தலைவர்கள் தமது உயிரை இழந்தனர்.

ஆயிரமாயிரம் தொழிலாளர்களின் உதிரத்தின் உறுதியினுல் இப்போராட்டம் வெற்றி பெற்றது. இதுவே மேதினப் போராட்டமாகும்.

உலகெங்கும் சோஷலிசப் புரட்சிகளுக்கு உதவியான காரணிகளாய் மாக்சியக் கருத்துக்கள் மேதினப் போராட்டத்தினுல் பரவின. 1917இல் அறிஞர் வி. ஐ. லெனின் தலை

(6 ஆம் பக்கம் பார்க்க)

### அறிவொளி

அறிவொளி கல்வி வெளியீட்டுக்கு உயர்தர கலை, வர்த்தக துறை மாணவர்களுக்கு ஏற்ற கட்டுரைகள் விரிவுரையாளரிடமும் பட்டதாரி ஆசிரியர்களிடமும் இருந்து எதிர்பார்க்கின்றோம். பிரசுரத்திற்கு ஏற்கப்படும் கட்டுரைகளுக்கு சன்மானம் வழங்கப்படும்.

ஆசிரியர்
அறிவொளி
த. பெ. இல. 162,
கொழும்பு.

[309]


# NEW MASTER INSTITUTE

B. M C. Lane, :: Jaffna.

## 89 A/L DAY CLASSES

புதிய பகுதிகள் ஆரம்பம்
02-05-89 செவ்வாய் முதல்

**Physics - திரு. விக்கி**

9.15 — 10.15 — பொறியியல்
10.15 — 12.15 — ஓட்டமின்னியல்
1.00 — 2.00 — வெப்பவியல்

**Chemistry - திரு. இந்திரன்**

8.15 — 9.15 — கைத்தொழில் இரசாயனம்
1.00 — 2.00 — சேதன இரசாயனம்
2.00 — 3.00 — அயன் சமநிலை
3.00 — 4.00 — அவத்தைச் சமநிலை

**Botany - திரு. செல்வநேசன்**

7.15 — 8.15 — தாவர இராட்சியப் பிரிவும் இனப்பெருக்கமும்
9.15 — 10.15 — உடற்றெழிலியலும் இழையவியலும்
10.15 — 11.15 — வினுவிடை வகுப்பு
11.15 — 12.15 — நுண்ணங்கிகள் உலகம்

**Zoology - திரு. நாகநாதன்**

7.15 — 8.15 — குருதிச் சுற்றோட்டத் தொகுதி
8.15 — 9.15 — பொருளாதார விலங்கியல்
2.00 — 3.00 — முளையவியல்
3.00 — 4.00 — அசஞ்சுரக்கும் தொகுதி, பிறப்புரிமையியல்

**Pure & Applied Maths.- திரு. சந்திரமோகன்**

7.15 — 9.15 — நேர்கோடு
10.15 — 12.15 — மொத்தல், வகையீடு
2.00 — 3.00 — ஒரு தளவிசை
3.00 — 4.00 — சிக்கல் எண்கள்

[சி-2406]


## பிறப்பில் குழந்தை ஒவ்வொன்றும் தூய்மையாகவே பிறக்கின்றது

### உளவியல் கருத்தரங்கில் உரை

குருநகர் மே 1

பிறப்பில் ஒவ்வொரு குழந்தையும் களங்கமற்று தூய்மையாக உலகுக்கு வருகின்றது. ஆனுல் தவருன வளர்ப்பே உலகில் அவற்றைக் களங்கப்படுத்துகின்றன. எனவே பெற்றோரின் அன்பும், அரவணைப்பும் சிறப்பம்சமாக அமைகின்றன.

யாழ். ஐ. டி. பி நிறுவன மாணவர் மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட உளவியல் கருத்தரங்கில் கலந்து பேசிய 'நான்' உளவியல் சஞ்சிகை ஆசிரியர் வண. வின்சன் பற்றிக் மேற்கண்டவாறு கூறினுர்.

இக் கருத்தரங்குக்கு நிறுவன இயக்குநர் திரு. ரி. சந்திரகுமார் தலைமை வகித்தார்.

வண. வின்சன்பற்றிக் தமது உரையில் மேலும் கூறியதாவது:

நல்லதொரு குடும்பம் என்பது குடும்பத்து உறுப்பினர்கள் ஒருவரோடு ஒருவர் கொண்டுள்ள நல்லுறவை வெளிப்படுத்தும்.

அத்துடன் அவர்கள் சமுதாயத்தோடும் எவ்வளவு தூரம் இணைந்துள்ளார்கள் என்பதனையும் தெளிவுபடுத்துவதாக அமையும்.

ஒவ்வொருவனும் தன்னுடன் குடும்பத்தையும், சமூகத்தையும் நிறைவு படுத்த முற்படவேண்டும். மனிதனது சிந்தனையின் வளர்ச்சி அவன் எய்திய பரிணுமத்தைக் காண்பிப்பதாக அமைய வேண்டும்.

இப்படி அவர் தெரிவித்தார்.

ஜனுப் ஏ. எம். நௌஷாத், செல்விகள் ஏ. ஆனந்தரூபி, ஜெயந்தி கிருஷ்ணன் ஆகியோரும் உரையாற்றினர்.

'கம்பியூட்டர்' சஞ்சிகையின் இதழொன்றும் வெளியிடப்பட்டது. (ச-51)

### விளையாட்டுப் போட்டி:

## உடல் உள உறுதியையும் நற்பண்புகளையும் வளர்க்கிறது

### கல்வி அதிகாரி பேச்சு

சாவகச்சேரி, மே 1

விளையாட்டுப்போட்டிகளில் பங்குபற்றுவதால் உடல், உள உறுதி ஏற்படுவதுடன் நற்பண்புகளும் வளர்கின்றன. விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி தோல்வி முக்கியமல்ல. அவ்விளையாட்டில் பூரண பங்களிப்பே அவசியமானது. வெற்றி தோல்வியைச் சமமாக மதிக்கவேண்டும். மாணவப்பருவம் இப்பயிற்சிகளுக்கு மிகவும் ஏற்றது.

யாழ் கல்வித் திணைக்கள கல்வி அதிகாரி திரு. அ. தங்கராசா, மட்டுவில் ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தில் நடந்த இல்ல விளையாட்டுப் போட்டி விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு கூறினுர்.

விளையாட்டுப்போட்டிகளில் காசிநாதர் (பச்சை) இல்லம் முதலிடத்தைப் பெற்றுச் சாம்பியனுனது. கந்தர் [மஞ்சள்] இல்லம், நடராசா [சிவப்பு] இல்லம் ஆகியவை முறையே 2ஆம், 3ஆம் இடங்களைப் பெற்றன.

வித்தியாலய அதிபர் திரு. அ. பேரம்பலம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களை பிரதம விருந்தினர் திரு. அ. தங்கராசா வழங்கினுர். [ச 31]

## சிக்கன சேமலாபச் சங்கம் தொடர்ந்து இலாபத்தில்

### கூ. சங். முகாமையாளர் தகவல்

பருத்தித்துறை, மே. 1

"புலோலி ப.நோ கூ. சங்க சிக்கன சேமலாபச் சங்கம் தொடர்ந்தும் இலாபத்தில் இயங்குகிறது".

சங்க பொது முகாமையாளரும் சிக்கன சேமலாப நிதிச் சங்கத்தின் தலைவருமான திரு. சோ. அருணகிரி அண்மையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றைய இ[illegible] காலகட்டத்தி[illegible] கள் மத்தியில் சேமிப்புப் பழக்கம் கைக்கொள்ளப்படுகிறது.

இதன் மூலம் 1156 ரூபாவுக்கு மேலாக நிகர லாபம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த லாபம் யாழ். சிக்கன சேமலாப நிதிச் சமாசத்தின் லாபத்திலும் அதிகமாகவே உள்ளது.

மேலும் எமது ஊழியர்கள் தமது சேமிப்புக்களை இச் சிக்கன லாப நிதிச் சங்கத்தில் முதலீடு செய்தால் அந் நிதியை கடன் தேவைப்படுவோருக்குக் கொடுக்க [illegible] குக்". [இ-118]

## கொலை வழக்கு ஒத்தி வைப்பு

சட்டத்தரணி விஜேதாஸ லியனுராட்சி கொலைவழக்கு விசாரணை ஜூன் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கு கடந்த திங்கட்கிழமை மூன்று மேல் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

அப்போது புதிய விசாரணை திகதி நிர்ணயிக்கப்பட்டது.

இவ் வழக்கில் பொலீஸ் அதிபர், தர்மதாஸசப் இன்ஸ்பெக்டர் வர்குல சூரியா [illegible] நாயக்கா ஆகியோர் மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.


# FORTUNA ENTERPRISES

## பிரயாண ஒழுங்குகள்

குவைத்:

1. ஆஸ்பத்திரி சுத்திகரிப்பாளர் (CLEANERS)
2. FITTERS
3. ELECTRICIANS
4. FIRE FIGHTERS.

தொடர்பு கொள்ளவும்:

**இ. விஸ்வேஸ்வராயன்,**
3 ஆம் கட்டை லேன்,
கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

(சி/2246)



# Uduvil Girl's College

## Further Education Programme

✶ Programming in Basic Language
Data processing and training on Archimedes B.B C Master Compact Radio Shack and Acorn Computers
3 Month Course ✶ Practicals 40 hrs.
**Fees Rs. 1500/-**

✶ Diploma in Structured Cobol
Latest structured programming Techniques & Training on B. B. C. Master Compatibles.
Practcials 40 hours
**Fees Rs. 1500/-**

✶ Diploma in D Base III +
Using Modular Programming Techniques on line Data Base Updations. Multiple Data Base handling Indexing Practicals 50 hours.
3 month Course **Fees Rs. 1750/-**

**Commencing on 05-05-1989 (Week Days)**

[C/2415] DIRECTRESS.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது

## ★பிறந்தநாள் வாழ்த்து★



### செல்வன் யூர்க்

(01 - 05 - 1989)

சுவிற்சலாந்தில் வசிக்கும் றெகோரி மரியதாஸ்—மேரி யோசேப்பின் தம்பதியரின் செல்வப்புதல்வன் யூர்க் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று தனது இல்லத்தில குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை சுவிற்சலாந்தில் உள்ள அம்மா, அப்பா, ஞானப்பெற்றோர், அன்ரி, அக்காமார் மற்றும் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த அம்மம்மா, அம்மப்பா, அன்ராமார், சித்தி, சித்தப்பா, தம்பி டிலான், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று சிறும்சிறப்புடன் பல்லாண்டு காலம் நீடூழிவாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

[10772]

## தேவை

பிஸ்கற் வகைகள், பாண், பணிஸ் குக்கீஸ் (கல்பணிஸ்) தயாரிப்பதில் கைதேர்ந்த தொழிலாளர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றது. அனுபவச் சான்றிதழ்களுடன் நேரடியாக புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறைக்கு வருகை தரவும்,

தலைவர்

**புலோலி ப. நோ. கூ, சங்கம்.**

(C/2417)

## பதவி வெற்றிடம்

### லொறிச் சாரதி பதவி

(நிரந்தரம்)

புலோலி பல நோ. கூ. சங்கத்திற்குச் சொந்தமான 7 தொன் டாடா பென்ஸ் லொறிச் சாரதியாக தெரிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் இலங்கை பிரசைகளிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் 15 - 05 - 1989 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக தலைவர், புலோலி பல, நோ. கூ. சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை என்ற முகவரிக்குப் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**தகைமைகள்:**

1. 5 ஆம் வகுப்புச் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. 1989 - 05 - 15 இல் 25 வயதிற்கு மேற்பட்டவராகவும், 50 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
3. லொறி சாரதியாக நான்கு (4) வருட அனுபவமும், லொறிச் சாரதி உத்தரவுப் பத்திரமும் இருத்தல் வேண்டும்.
4. எமது சங்க தொழிற் பரப்புக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
5. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி தனது கண்பார்வையில் எதுவித கோளாறும் இல்லையென்பதை வைத்திய அத்தாட்சிப் பத்திர மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.
6. ரொக்கப் பிணையாக ரூ. 5000/-மும், ஆதனப் பிணையாக ரூ. 5000/-மும் பதவி பொறுப்பேற்பதற்கு முன்பாக செலுத்த வேண்டும்.
7. சம்பளம் கூ. வே. ஆணைக்குழு விதிக்கமைவாக வழங்கப்படும்.

**தலைவர்,**

புலோலி பல. நோ. கூ. சங்கம்.

(சி/2306)

# கேள்வி அறிவித்தல்

## பிரதேசக் கல்வித் திணைக்களம், நல்லூர், யாழ்ப்பாணம்

### ஆசிய அபிவிருத்தி வங்கி - கல்விப் புனருத்தாரணத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளின் கட்டிட வேலைகள்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ். பிரதேசக் கல்வித் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1989 ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் திகதி (26 - 05 - 1989) முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் அதன் எதிரே உள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு, கட்டிட வேலை செய்வதற்கென கல்வித் திணைக்களம், கட்டுவேலைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கட்டிடத் திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களுக்கு 1989 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி [23 - 05 - 89] பிற்பகல் 2.00 மணி வரை மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணமாக [ரூபா 50/-] ரூபா ஐம்பதும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக [ரூபா 250/-] ரூபா இருநூற்று ஐம்பதும் செலுத்தியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் யாழ். கல்வித் திணைக்களத்தில் வழங்கப்படும். கேள்விப்பத்திரப் பணம், கேள்வி வைப்புப் பணம் ஆகியன வங்கிக் கட்டளையாகச் செலுத்தப்படல் வேண்டும். கேள்விகள் 1989 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி [26 - 05 - 89] காலை 10 30 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் அதுபற்றி அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தம் கைச்சாத்திடல் வேண்டும். தவறின் மறு அறிவித்தலின்றி தெரிவு இரத்துச் செய்யப்படும்.

கேள்விப் பத்திரங்களுடன் இணைத்து வழங்கப்படும் ஒவ்வொரு வேலைக்குமான கால அட்டவணையின்படியும் ஒப்பந்தப் பிரமாணங்களின்படியும் தவறாது வேலையைப் பூர்த்தி செய்து தரக் கூடியவர்கள் மட்டும் இவ்வேலைகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரங்களை யாழ். பிரதேசக் கல்வித் திணைக்களத்தின் கட்டிட வேலைப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**செல்வி தி. பெரியதம்பி,**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம்.**

பிரதேசக் கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
24 - 05 - 1989

| பாடசாலையின் பெயர். | வேலை விபரணம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை. |
|---|---|---|
| 1. யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி உடுப்பிட்டி. | மூன்று மாடிக் கட்டடம் 90' x 25' விஞ்ஞான கூடம் | ரூ. 1,600,000.00 |
| 2. யா/ உடுப்பிட்டி அ. மி ஆண்கள் கல்லூரி. | ,, ,, | ரூ. 1,600,000.00 |

[சி 2245]

# கேள்வி அறிவித்தல்

## பிரதேச கல்வித் திணைக்களம் - கிளிநொச்சி

### ஆசிய அபிவிருத்தி வங்கி - கல்விப்புனருத்தாரணத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளின் கட்டிட வேலைகள்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் கிளிநொச்சி பிரதேசக் கல்வித் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1989 ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி [31-05-89] முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் அதன் எதிரே உள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு, கட்டிட வேலை செய்வதற்கென கல்வித்திணைக்களம், கட்டு வேலைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கட்டிடத்திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 1989ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் திகதி [26-05-89] பிற்பகல் 2 00 மணி வரை மீளளிக்கப்படாத கேள்வி பத்திரப் பணமாக (ரூபா 50/-) ரூபா ஐம்பதும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக (ரூபா 250/–) ரூபா இருநூற்று ஐம்பதும் செலுத்தியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தில் வழங்கப்படும். கேள்விப் பத்திரப் பணம், கேள்வி வைப்புப் பணம் ஆகியன திணைக்களத்தில் செலுத்தப்பட வேண்டும். கேள்விகள் 1989ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி (31-05-89) காலை 11.00 மணிக்கு கிளிநொச்சி கல்வித்திணைக்களத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் அதுபற்றி அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தம் கைச்சாத்திடல் வேண்டும். தவறின் மறு அறிவித்தலின்றி தெரிவு இரத்துச் செய்யப்படும்.

கேள்விப் பத்திரங்களுடன் இணைத்து வழங்கப்படும் ஒவ்வொரு வேலைக்குமான கால அட்டவணையின் படியும் ஒப்பந்தப் பிரமாணங்களின் படியும் தவறாது வேலையைப் பூர்த்தி செய்து தரக்கூடியவர்கள் மட்டும் இவ்வேலைக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரங்களை கிளிநொச்சி பிரதேச கல்வித் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**- க. கா. சோமசுந்தரம்**
**பிரதிக்கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி.**

பிரதேச கல்வித் திணைக்களம்,
கிளிநொச்சி.
27-05-1989.

| பாடசாலையின் பெயர் | வேலை விபரம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|
| 1. கிளி/ அக்கராயன் அ. த. க. பா. | பாடசாலைக் கட்டிடம் 60' × 20' பெருந் திருத்த வேலை மல கூட கட்டிடம் சலகூட கட்டிடம் | 300,000. 00 |
| 2. கிளி/ பூநகரி ம. வித். | ஆசிரியர் விடுதிக் கட்டிடம் பெரும் திருத்த வேலை. | 400,000. 00 |

[சி-2414]

## தெற்கில் 'கழுகு' இயக்கம்!

''ஈகிள்'' (கழுகு) என்ற பெயரில் புதிய இயக்கம் ஒன்று தென்பகுதியில் தோன்றியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

குருநாகல், அம்பன்பொல பகுதிகளில் இந்த இயக்கம் செயற்படுவதாகச் சொல்லப்படுகிறது.

தலாவை என்ற இடத்தில் இனந்தெரியாத நபர் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டார். பின்னர் அவரது சடலம் எரிக்கப்பட்டது. இக் கொலைக்கு 'ஈகிள்' இயக்கம் உரிமைகோரியுள்ளதாகத் தெரிகிறது.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி

### அப்புத்துரை தங்கச்சிப்பிள்ளை

[வயாவிளான்]

மலர்வு: 03- 04- 1924    உதிர்வு: 01- 04- 1989


எம்மை ஆருத்துயரில் ஆழ்த்தி விட்ட அணையாச் சுடரே! இந்நாளிலல்ல எப்போதுமே உம்மை மறவோம், உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், சகோதரிகள்,
மற்றும் உறவினர்கள்.

இருபாலை,
கோப்பாய்.

[302[

## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### சின்னத்தம்பி ஜெகநாதன்

(விஞ்ஞான பீட 1 ஆம் வருட மாணவன், யாழ். பல்கலைக்கழகம், ஆசிரியர், விஸ்வமடு அ. த. க. பாடசாலை)

மலர்வு: 19 - 11 - 1966    உதிர்வு: 02 - 02 - 1989

எமதன்புச் செல்வனே!
அறிவுச் சுடர்கள் உன்னுள்ளே
ஒளிபரப்ப வேண்டுமென்ற
அடங்காத ஆசையில்தான்
அறிவகத்திற்கனுப்பி வைத்தோம்
பாதியிலே எம்மைவிட்டுப் பறந்து விட்டாயே!
அடங்காத நம் துன்பம் எப்படி அடங்கும்?
ஆருத்துயர் எம்மைவிட்டு எப்படியகலும்?

★ இன்று 01 - 05 - 1989 பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் வீட்டுக்கிரியைகளிலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பெற்றோர், சகோதரர்,**
**உறவினர்கள்.**

4ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

(323)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுவேலி சூசையப்பர் ஆலய திருநாள் சிறப்பிதழ் [1-5-89]



தொழிலாளர் பாதுகாவலர் புனித சூசையப்பரின் திருச்சுரூபம்.

## நிறைந்த வாழ்வும், கேட்டவரமும் அளித்து வருகின்ற சூசையப்பர்

**தூய** ஆவியினால் வழி நடத்தப்படும் எம் திருச்சபையானது, தொழிலாளர்களின் பாதுகாவலராகப் புனித சூசையப்பரைத் தெரிந்தெடுத்து அவரின் தினத்தை வைகாசி மாதம் முதலாம் நாள் கொண்டாடி வருகிறது,

இப்பிரகடனத்தை 12ஆம் பத்திநாத பாப்பரசர் 1955 ஆம் ஆண்டு வெளியிட்டார்.

இதனை அனைத்துக் கத்தோலிக்க மக்களும் கொண்டாடி வருகிறார்கள். யாழ் மறைவட்டத்திலே, அச்சுவேலிப் பதியில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் புனித சூசையப்பர் அம்மக்களின் குறை தீர்த்து நிறைவாழ்வும் கேட்ட வரமும் அளித்து வருகின்றார்.

இதனால் இம்மக்கள் அவரின் திருவிழாவைப் பெருவிழாவாக வருடா வருடம் கொண்டாடி மகிழ்கின்றார்கள். இவ்விழாவானது பக்தியருட்சியுடனும், மிகக் கோலாகலத்துடனும் கொண்டாடப்பட்டு வருகின்றது

**கிராமவிழா**

இது ஒரு பங்குவிழாவன்று. கிராமவிழாவாகும். மக்களும் கோயிலும் ஒன்றுகலந்து எடுக்கும் பெருவிழாவாகும். மக்களும் கோயிலும் விழாக் கோலம் பூணும் சிறப்பு விழாவாகும்.

இதற்குக் காரணம் அச்சுவேலி மக்கள் மத, இன பேதமின்றி ஒன்றுதிரண்டு தங்கள் கிராமவிழாவாகக் கொண்டாடி வருகின்றார்கள். இந்நாளில் தத்தம் பகைமை உணர்வுகளை, கோபதாபங்களை மறந்து ஒன்றுபட்டு ஒற்றுமையாய் இவ்விழாவினைக் கொண்டாடி மகிழ்கின்றார்கள்.

தம் இல்லங்களையும், உள்ளங்களையும் அழகுபடுத்தி, புத்தாடை அணிந்து, புத்தூக்கத்துடன் மகிழ்கின்றார்கள். விவசாயிகள் நிறைந்த கிராமந்தான் அச்சுவேலி. விவசாயத் தொழிலாளர்கள் நிறைந்த இக்கிராமத்தில் கோயில் கொண்டது மிகவும்பொருத்தமும் அற்புதமுமாகும்.

இவரின் ஆசியினாலும் அருளினாலும் விவசாயிகள் தொழில் வளம் சிறக்க, மனைவளம் சிறக்க வாழ்கின்றார்கள். இவ்விழாவின் சிகரமாக விளங்குவது மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட தேரில், அழகு மிளிரும் கிராமவீதிகளினூடே பக்தகோடிகள் புடைசூழப் பவனிவரும் புனிதரின் காட்சி ஆகும். இக்காட்சியானது மனதைவிட்டகலாத அருட்காட்சியும், நெஞ்சம் மறக்கமுடியாத பெருங் காட்சியுமாகும்.

**அச்சுவேலியில் கத்தோலிக்கம்**

போர்த்துக்கேயர் காலத்தில்தான் கிறிஸ்தவ மதமானது யாழ்நகரில் முதன்முதல் தோன்றியது. இவ்வேளைதான் அச்சுவேலிவாழ் மக்களும் கிறிஸ்து மறையில் சேர்ந்து, விசுவாசத்தில் நிலை கொண்டார்கள். இக்காலத்தில் கோயில் ஒன்று கட்டப்பட்டது என்பதற்குச் சரித்திரச் சான்றுகளும் உள. தற்பொழுது இருக்கும் கிறிஸ்ரியன் மகாவித்தியாலயத்திற்குப் பின்னால் உள்ள பாழடைந்த கோயிலானது கத்தோலிக்க மக்களின் ஸ்பிரீத்து சாந்துவானவரின் கோயில் என்று கர்ணபரம்பரையாகக் கூறப்பட்டுவருகின்றது.

**''அடுத்தார் வளவு''**

ஒல்லாந்தரின் காலத்தில் நம் சத்தியமறை அழிக்கப்பட்டு, கோயில்கள் ஒழிக்கப்பட்டு வந்தன. ஆனால் உறுதியான விசுவாசங்கொண்ட அச்சுவேலி மக்கள் தம் விசுவாசத்தைக் காப்பாற்றியதுடன் கோயில்களிலுள்ள சுரூபங்களைப் பாதுகாப்பாக தனியார் வீடுகளில் மறைத்துவைத்து செபஆராதனைகளில் ஈடுபட்டு வந்தனர்.

இக்காலத்தில்தான் 1687 ஆம் ஆண்டு இரப்போன் வேடம் பூண்டுவந்த யோசப் வாஸ் முனிவர் அவர்கள் யாழ் நகர் வந்து கத்தோலிக்கரைத் தேடி அலைந்து இரகசியமாகத் தம்பணியினை மேற்கொண்டு வந்தார்,

இவரது தியான சம்பிரதாயச் சபையைச் சேர்ந்த குருக்கள் அச்சுவேலிக்கும்வந்துபணி புரிந்தார்கள் என்பதற்குச் சரித்திரச் சான்றுகள் இன்றும் உண்டு தற்பொழுதுள்ள அச்சுவேலிப் பொதுச்சந்தைக்குக் கிழக்குப் பக்கமாக உள்ள 'கணக்கர்' வீட்டில்தான் பலி பூசைகள் நிறைவேற்றப்பட்டதென்றும், இதனால்தான் அவ்வளவை இன்றும் 'அடுத்தார் வளவு' என்றும் மக்கள் பெருமையோடு கூறிவருகிறார்கள்.

**பழைய குருசடி**

தற்பொழுது கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் புனிதரின் ஆலயத்திற்கு வடகிழக்குப் புறத்தே அமைந்துள்ள 'பழைய குருசடி' எனப்படும் இடத்தில் மண்ணாலுங் கிடுகுகளாலும் கட்டப்பட்ட ஆலயம்தான் முதலில 1830ம் ஆண்டு கட்டப்பட்ட புனிதரின் ஆலயமாகும்.

இதனை அக்காலத்தில் வாழ்ந்த முதலியார், செட்டியார், சீமார், இராமர் எனப்பட்ட நான்கு குடும்பங்களைச்சேர்ந்தவர்களால் கட்டப்பட்டதென்று இன்றும் மக்கள் பெருமையுடன் பேசிவருகின்றார்கள்.

இன்று 250 குடும்பங்களைக் கொண்டு விளங்குபவர்கள் இவர்களின் பெருக்கமே. மக்கள்தொகைப் பெருக்கத்தினால் பழைய குருசடி கோயில் கைவிடப்பட்டு, தற்பொழுது கோயில் இருக்கும் இடத்தில் சிறிய அளவில் 1880ஆம் ஆண்டு கல்லால் கட்டப்பட்டது.

ஆனால் இதன் அமைப்பும், அழகும், உயரமும் போதாமையினால், 1898 இல் இதனை அழித்து, அதே அத்திவாரத்தில் புதிய அமைப்புடனும் பொலிவுடனும் கூடிய 60 அடி நீளமான பிரதான கோயிலையும் அடுத்தாரையும் 1901 ஆம் ஆண்டு கட்டிமுடித்தார்கள். புகழ்பெற்ற காலஞ்சென்ற தம்பிமுத்துப் புலவரின் மேற்பார்வையில் சித்திரவேலைப்பாடுகள் கொண்ட முகப்புடன் கூடிய இரு மணிக்கூண்டுக் கோபுரங்களும் கட்டப்பட்டன.

**ஆலய வளர்ச்சி**

இதன் பிற்பாடு முகப்பின் தோற்றத்துக்கு இணையாக 1954 இல் ஒரு ''டோம்'' Dome) கட்டப்பட்டது. இவ்வேலையானது வீட்டுக்கு ஒருவர் என்ற சிரமதான முறையில் மக்களின் கடின உழைப்பாலும், மறைந்த சேர். சிற்றம்பலம் கார்டினர் இவருக்கு உறுதுணையாக இருந்த வேறு சில பெரியோரின் முயற்சியாலும் நிறைவு பெற்றது.

பின்னர் ஆலயத்தை உயர்த்திப் புதுக்கூரையையும் அத்துடன் அழகான ஆலய முன்றிலையும் மறைந்த அருட்திரு. வென்றக்கோன் அடிகளார் முன்னின்று நடத்தினார்.

சென்ற வருடம் ஆலயப் புனருத்தாரணம் ஆரம்பிக்கப்பட்டது. இன்று பூரணப் புதுப்பொலிவுடனும் கலைவடிவுடனும் திகழும் இவ்வாலயத்தை நன்றி மறவாத, தாராள மனம் கொண்ட அச்சுவேலி மக்களும், புனிதரின் ஆசியினால் வெளிநாடுகளில் வாழும், தொழில்பார்க்கும் மக்களினதும் நன்கொடைகளினால் செய்யப்பட்டதாகும்.


1988 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 23 ஆந் திகதி இவ்வாலயமானது வழிபாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.

**நெஞ்சம் மறக்கவில்லை**

அச்சுவேலி ஆலய வளர்ச்சியிலும், ஆன்மீகப் பணியிலும் கடமையாற்றியவெளிநாட்டு, உள்நாட்டுக் குருக்களின் பங்களிப்பினையும், பணியினையும்

[6-ஆம் பக்கம் பார்க்க]

- ஆர்- ஸ்ரனிஸ்லோஸ்
உபதலைவர் -
புனித சூசையப்பர் பங்குச் சபை



அச்சுநகர் புனித சூசையப்பர் ஆலயத்தின் அழகுமிகு தோற்றம்.

அச்சுநகர் பங்குத் தந்தை

## அருட்திரு றெஞ்ஞோ அடிகளார் ஆசியுரை

இலங்காபுரியில் சரித்திரம் படைத்த பன்மொழிப் புலவன் இனிய தமிழ்ப் பேச்சினிலே மேடைத் தென்றல் தன் நலம் பேணுமுற்றும் துறந்த முனிவன் நல்லூர் ஞானப்பிரகாசர் வளர்ந்த பூமி.

கொடைவள்ளலும் பரிசுத்த பாப்பரசரினால் ',சேர்'' பட்டம் பெற்றவரும், பாடசாலை, வைத்திய சாலை, துறவியர் மடங்கள் ஸ்தாபகஞ் செய்தவரும், உதவிகள் மலை போல் உயர்ந்த போதும் தன் பெயரைக் சற்சிலையில் பொறித்து வைக்க விரும்பாத கொடைவள்ளல் சேர் சிற்றம்பலம் காடினர் பிறந்த மண் இப் புனித மண்ணில்.

முதுமைசால் உலகின்.
முது பெரும் தந்தையும்.
ஈரறவாழ்வுடையான்
தனிப் பெருந் தவத்தோன்.
தரணி போற்றும் சூசை மாதவன்.

கோயில் கொண்ட அச்சுநகர். இப்புனித கோவிலை அச்சுநகர் மக்கள் பெருவிருப்புடனும், உடல் உழைப்புடனும், புனருத்தாரணஞ் செய்து புதுப்பொலிவு பெற்று புதிய கோவிலாகவும் புண்ணிய தலமாகவும் மிளிரச் செய்ய விரும்பி முடிவும் கண்டுள்ளார்கள்.

இப்புனிதர் தொழிலாளர்களின் பாதுகாவலன், இத்தினம், 9நாட்கள் நவதின ஆராதனைகளுடன் வைகாசித்திங்கள் முதல்நாள் மிகப் பக்தி சிரத்தையுடன் கொண்டாடி நன்றித்துதி செலுத்துகின்றோம். இத்தினத்தில் அச்சுநகர் பங்கு மக்களுக்கு என்னுடைய நல்லாசிகள் உரித்தாகுக.

இப் புனிதரில் துலங்கிய பொறுமை, சாந்தம் தாழ்ச்சி கற்பு என்னும் புண்ணியத்தில் நாமும் வழி நடக்க இறைஆசியை இறையேசுமூலம் வேண்டி நிற்போம்.

வளர்க புனித வளன் பக்தி
வாழ்க எம் மக்கள்
நிறைசமாதானம் உண்டாகுக!

★ வாழ்த்துகின்றோம் ★

உமா ரேடிங் கொம்பனி
57, 4ஆம் குறுக்குத்தெரு,
கொழும்பு 11.
T.P 27457

சுனில் றேடேர்ஸ்
57, 5ஆம் குறுக்குத்தெரு,
கொழும்பு 11.
T P 545400

சரவணஸ் ரேடிங் கொர்பனி
61, 4ஆம் குறுக்குத்தெரு
கொழும்பு 11.
T.p 27437

விஸ்வ தச்சுத் தொழிற்சாலை
பருத்தித்துறை வீதி,
அச்சுவேலி.

கங்கா கிறீம் கவுஸ் &
கோப்பி பார்
பஸ்நிலையம், அச்சுவேலி.

சாயி றெலி ரேப்
&
சாயி வீடியோ
பஸ்நிலையம், அச்சுவேலி,

வலிகிழக்கு. ப. நோ. கூ. சங்கம்
அச்சுவேலி.

G.P.N
கட்டட ஒப்பந்த காரர்
211\6, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

ராஜ்கோ புடவை மாளிகை
பஸ்நிலையம்,
அச்சுவேலி.

★ வாழ்த்துகின்றோம் ★

இந்திரா பில்டிங் வர்த்தகர்கள்
இல. 2,3, இந்திரா பில்டிங்,
சங்கானைவீதி, அச்சுவேலி.

மினிப்பிரியா றேடிங்
பருத்தித்துறை வீதி,
அச்சுவேலி.

விடியோ கலா மினி
மத்திய சந்தை,
அச்சுவேலி,

G.L.D. இன்டஸ்ரீஸ்
சங்கானை வீதி,
அச்சுவேலி.

சிவா றேடேர்ஸ்
பஸ்நிலையம்,
அச்சுவேலி.

சேவி கிளாஸ் வேக்ஸ்
பருத்தித்துறை வீதி,
நீர்வேலி.

கண்டி ஸ்ரோர்ஸ்
பஸ்நிலையம்,
அச்சுவேலி,

தர்ஷினி எலக்றிக்கல்ஸ்
பஸ்நிலையம்,
அச்சுவேலி.

சாள்ஸ் ஸ்ரோர்ஸ்
கைத்தொழில் பேட்டை வீதி
அச்சுவேலி.

பாலா போட்டோ
பருத்தித்துறை வீதி,
அச்சுவேலி.

சபா றேடிங் சென்ரர்
பஸ்நிலையம்,
அச்சுவேலி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ கம்பியூட்டர் கல்வி ★

**d Base III +**

2 Months
on
TUESDAYS & FRIDAYS

A job oriented
Computer Course

Commencement — 02 - 05 - 1989
at 8.30 a. m.
Lectures by Qualified & Experienced Panel
தமிழிலும் விளக்கங்கள் தரப்படும்
Fees: Only 600/- per Month

**C. I. M. A, I. D. P. M, I. A. B**
**Book Keeping, Shorthand / Typing,**
**Basic வகுப்புகளும் நடைபெறுகின்றன.**

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
16, 3rd Cross Street,
(O. L. R. தேவாலய மேற்குப் பக்கம்)
JAFFNA.
[C-2408]



## ஒத்துமாறுதல்

கொழும்பு மாவட்டத்தில் கற்பிக்கும் விஞ்ஞான, கணித ஆசிரியை ஒருவர் யாழ் மாவட்ட பாடசாலைக்கு ஒத்துமாற விரும்புகிறார். இவர் க. பொ. த. உயர்தர சித்தியுடன் விஞ்ஞான கணித ஆசிரியராக நியமனம் பெற்றவர். அவ்வாறு ஒத்துமாற விரும்புபவர்கள் நேரிலோ, கடித மூலமாகவோ தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**திரு. க வயிரமுத்து,**
**இளைப்பாறிய அதிபர்,**
**சாரையடி,**
**புலோலி.**
( /2418)



## A/L வகுப்புக்குரிய பொருளியல் ஆசிரியர் தேவை

பொருளியல் பாடத்தில் பட்டம் பெற்ற பொருளியற் பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம். தகுதியான தகைமைகள் கொண்ட கற்பித்தலில் அனுபவமுள்ள ஆசிரியர்கள் தமது தகுதி, தகைமை, அனுபவம் ஆகியவற்றை தகுந்த ஆதாரத்துடன், அத்தாட்சிப் பத்திரங்களை அதிபரிடம் சமர்ப்பித்து

**10-05.1989 ஆந் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்.**

**நா. ஸ்ரீபுஸ்பநாதன்,**
அதிபர்.
யா/யூனியன் கல்லூரி,
தெல்லிப்பழை.
(C/2395)



## தேவை - WANTED

கிளிநொச்சி நகரின் பிரபலமான கல்வி நிறுவனம் ஒன்றின் வெளியீட்டுப் பகுதியில் கடமையாற்ற தமிழ், ஆங்கில தட்டெழுத்தில் தேர்ச்சி பெற்ற பெண் தட்டெழுத்தாளர் தேவை. தங்குமிட வசதிசெய்துதரப் படும். ஆங்கில சுருக்கெழுத்தில் தேர்ச்சி பெற்றவர் களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். வேதனம் பேசித் தீர்க்கப்படும். பின்வரும் முகவரிக்கு தங்கள் சொந்தக் கையெழுத்தில் விண்ணப் ங்களை 05- 05- 89 க்கு முன் விண்ணப்பிக்கவும்.

**இயக்குநர்,**
**வெளியீட்டுப்பகுதி,**
**விஞ்ஞானக் கல்வி நிலையம்,**
**கரடிப் போக்குச்சந்தி,**
**கிளிநொச்சி.**
[326]



## BRIGHT TRAINING CENTRE

க. பொ. த உயர்தர வர்த்தக, கலை, மாணவர்கள் நன்மை கருதி பிரபல விரிவுரையாளர்களாலும், ஆசிரியர்களின் கூட்டு முயற்சியாகவும வெளிவருகிறது.

**'அறிவொளி'**
**கல்வி வெளியீடு**

இதற்கென BRIGHT STUDY CIRCLE எனும் கல்வி வட்டம் ஒன்றும் மாணவரிடையே ஆரம்பிக்கப் படுகின்றது கல்விவட்டத்தைப்பற்றி அறியவிரும்புவோர் சுயவிலாசமிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்க:

**அறிவொளி**
**பிறைட் பயிற்சி நிறுவனம்,**
**த பெ. இல. 162.**
**கொழும்பு.**
(308)


ஜொனியன்ஸ் நடத்தும் கிரிக்கெட்:

# ஷப்ரு - கொக்குவில் அணிகள் இன்று இறுதிப் போட்டியில் மோதல்

யாழ்ப்பாணம், மே 1

பெனின்சுலா குறூப் ஸ்தாபனத்தின் ஆதரவுடன் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் பெனின்சுலா சுற்றுக் கிண்ணத்துக்கான இறுதிப்போட்டி இன்று முதலாம் திகதி காலை 9-00 மணிக்கு சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றது.

இப்போட்டியில் கொக்குவில் சனசமூகநிலைய அணியை எதிர்த்து ஷப்ரு விளையாட்டுக்கழகம் மோதுகின்றது.

சனிக்கிழமை காலை நடைபெற்ற அரை இறுதி ஆட்டத்தில் ஜொனியன்(பி) அணியை எதிர்த்து ஆடிய கொக்குவில் சனசமூக நிலைய அணி வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன் (பி) அணி 29 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றது. அபாரமாகஆடிய எஸ். சுதாகர் 61 ஓட்டங்களையும் சாமுவல் 29, ரகுராம் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் செந்தில்வேல்நாதன் 3 விக்கெட்டுக்களையும் துஷ்யந்தன் 2 விக்கெட்டுக்களையும், பாலகுமார், குகன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றின'.

பின்னர் ஆடிய கொக்குவில் அணி 23·4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது.

பாலகுமார் ஆட்டமிழக்காமல் 42 ஓட்டங்களையும், விஸ்வநாத் 29, நற்குணேந்திரன் 23.) கோகுலன் 19, விஜயநாதன் 13 ஓட்டங்களையும் பெற்றனர்,

பந்து வீச்சில் ஜெய்சங்கர் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

மாலையில் நடைபெற்ற இரண்டாவது அரை இறுதி ஆட்டத்தில் ஜொலிஸ்டார் அணியை எதிர்த்து ஆடிய ஷப்ரு விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஷப்ரு அணி 29 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 224 ஓட்டங்களைப் பெற்றது.

அன்றாகிறேஷியன் 42, சுரேஸ் 37, விஜயகுமார் 36, பிரதீபன் 35, பிரபாநந்தன் 30, முருகவேள் 12 ஓட்டங்களையும் பெற்றனர்

பந்து வீச்சில் ஜெகேந்திரன் 3 விக்கெட்டுக்களையும், சிறீதரன் 2 விக்கெட்டுக்களையும், க. இளங்கோ, டானியல் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் ஆடிய ஷப்ரு அணி 16 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றது.

நித்தியரஞ்சன் 20 ஓட்டங்களையும், க. செழியன் ஆட்டமிழக்காமல் 9 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் பிரபாநந்தன் 4 விக்கெட்டுக்களையும் எஸ். பி. எஸ். இளங்கோ 2 விக்கெட்டுக்களையும், ஜெயந்தன், வரதன், தயாளன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்,

(இ-6)

# ஷப்ரு கிண்ண கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம், மே 1

யாழ் ஜொலிஸ்டார் விளையாட்டுக்கழகம் ஷப்ரு நிதி நிறுவனத்தின் ஆதரவுடன் ஷப்ரு சுற்றுக் கிண்ணத்துக்காக நடத்தும் மூன்றுவது வருட நொக்அவுட் முறையிலான மட்டுப்படுத்தப்பட்ட 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட போட்டிக்கான விண்ணப்பங்கள் யாழ் குடாநாட்டிலுள்ள விளையாட்டுக் கழகங்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன;

விண்ணப்ப முடிவு திகதி 'மே' மாதம் 3 ஆம் திகதி மதியம் 12 மணி ஆகும்.

இப்போட்டிகள் யாவும் சென். பற்றிக்ஸ்கல்லூரிமைதானத்தில் நடைபெறும்.

விண்ணப்பப் படிவங்களை

1. க. பூபாலசிங்கம், உதயன் விளம்பரக்கிளை, இல. 15, இரண்டாம் ஒழுங்கை, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்.

2. ந. சோமசுந்தரம், 45, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிகளில் பெற்றுக் கொள்ளலாம். [க-6]

## உலகத் தொழிலாள- -

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

மையில் சோவியத் நாட்டில் தொழிலாளி வர்க்கம் தலைமையிலான புரட்சி வெற்றி கண்டது. உலகில் முதலாவது தொழிலாளி வர்க்க அரசு தோன்றியது.

இதைத்தொடர்ந்து கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் சோஷலிச அரசுகள் ஸ்தாபிக்கப்பட்டன. சீனாவில் மாசேதுங் தலைமையிலும் வியட்நாமில் ஹோ சிமின் தலைமையிலும் அதுபோலவே கியூபாவில் பிடெல் காஸ்ட்ரோவின் தலைமையிலும் இன்னும் பல நாடுகளிலும் புரட்சி வெற்றிபெற்று தொழிலாள வர்க்க அரசுகள் ஸ்தாபிக்கப்பட்டன.

இவையாவும் தொழிலாளி வர்க்கத்தின் எழுச்சியினைக் குறிக்கின்றன. 'வர்க்க ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் எழுந்துவரும் போராட்டங்கள் தொழிலாளி வர்க்கக் கட்சியினூடே வெற்றியைப் படைக்கும்' என்ற கார்ல் மாக்சின் தீர்க்க தரிசனத்தை இவை நிரூபித்துள்ளன.

தொழிலாளி வர்க்கத்தின் சக்தியை உலகிற்குக் காட்டிய மே தினத்தில் எழுந்த சிந்தனைச் சுடர்கள் இன்றும்தொழிலாளி வர்க்கத்துக்கு வழிகாட்டிக்கொண்டிருக்கின்றன.

## 10 தினங்களில் 37 கார்கள் களவு

கொழும்பு, மே 1

கடந்த பத்துத் தினங்களில் நாட்டின் தென்பகுதியில் 37 கார்கள் களவாடப்பட்டன என்று பொலீஸ் தலைமைக்காரியாலயம் தெரிவித்தது.

இத்துடன் கடந்த மூன்று மாத காலத்தில் களவாடப்பட்ட கார்களின் எண்ணிக்கை 235 ஆக அதிகரித்தது. (ஒ-எ)

# தந்தை சூசை மாதவன் தொழிலாளர் பாதுகாவலன்

புனிதரின் ஆலயத்தைப் புதுப்பொலிவு பெற்றுக் காண விரும்பினர். சிறுவர், பெரியோர், பெண்கள் யாவரும் அயராது உழைத்தனர். இப்பங்கு இளைஞரின் பெருமுயற்சியும், பங்குத் தந்தை அருட்திரு பேணுட் றெஞ்ஜோ அவர்களின் கலைத் திறனும் இன்று புனிதரின் இல்லத்தை அழகுமிகு கலைக்

## நிறைந்த--- -

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்றும் என்றும் மக்கள் நன்றியுணர்வுடன் நினைவு கூருகின்றார்கள்.

அச்சுவேலிப் பங்கானது, தனியான பங்கானதுடன் சேவையாற்றிய குருக்கள், அருட்திரு. ஜி. ரி. பாலசுந்தரம், அருட்திரு. லெக்குத்தூர், அருட்திரு. யோண் சிங்கராயர் அருட்திரு. அன்ரன் இராசகாரியர், அருட்திரு. டி லாகே, அருட்திரு. சூசைநாதர் நல்லையா, அருட்திரு. வேந்தக்கோன், அருட்திரு. ந. சூசைப்பிள்ளை, அருட்திரு. எம். ரி. பற்றிக் திரு. பஸ்ரியாம்பிள்ளை - சவிரிமுத்து - பிரான்சிஸ் -நோபேட் - குரூஸ் ஆகியோர் ஆற்றிய அரும்பணிகள் அளப்பரியன. இவர்களை இன்றும் அச்சுவேலி மக்கள் நெஞ்சத்திலிருத்தி நினைவு கூருகின்றார்கள்.

தற்பொழுது பேரன்புடனும் பெருமதிப்புடனும்விளங்கும் பங்குத்தந்தை அருட்திரு. பேணுட் றெஞ்ஜோ றெக்னோ அடிகள் எமது பங்குக்கும், அதன் பாரிய வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும், ஆற்றும் பணிகள் சொல்லுந்தரமன்று. இன்றைய ஆலயப் பொலிவிற்குப் பூரணகர்த்தாவும் இவரேயாகும். இவர [illegible]

என்றும் தொடருக. புனிதரின் ஆசி என்றும் பெருகுக. கோவிலாகவும் புனிதம் பொங்கும் புண்ணிய தலமாகவும் மிளிரச் செய்துள்ளது.

1987ஆம் ஆண்டு ஆனித் திங்கள் 5, 6, 7ஆம் நாட்களில் இலங்கை ஆயுதப் படையினரின் அட்டகாசத்தில் இருந்தும் ஷெல் குண்டு வீச்சில் இருந்தும் புனிதவளன் கம் மக்களை கண்ணை இமை காப்பது போல் காப்பாற்றினார்.

தாங்க முடியாத இன்னல்கள், துன்பங்கள், துயரங்கள், பட்டினியின் மத்தியிலும் மக்கள் யாவரும் அவரின் இல்லத்திலேயே தஞ்சம் புகுந்தனர். ''சூசையப்பர் எம்மைக் காப்பாற்றினார்'' என்று பெருமையுடன் கூறிக்கொள்வர்

எமது தந்தை சூசை மாதவன் தொழிலாளிகளின் பாதுகாவலர். அவரின் பெருவிழாவை இம்முறை பெரும் சிறப்பாக பக்தி வணக்கத்துடன் வைகாசி முதல்நாள் கொண்டாடுகின்றோம்.

அவர் நமக்கு எடுத்துக்காட்டும் தாழ்ச்சி, பொறுமை, கற்பு, அடக்க ஒடுக்கம் என்னும் புண்ணியங்களில் அவரின் உதவியை இறையேசுவின் அருளுடன் கேட்டு நிற்கின்றோம்.

வளர்க எம் புனிதரின்
புண்ணியம் எம்மில்
பெருகுக அவர் காட்டிய
பாதை
சமாதானம் நாட்டில்
நிலவுக.

**சங் - சகோதரி**
**கலிஸ்ரர்**
[illegible]

பாடசாலைகளில்:

# நிகழும் காலை நேரக் கூட்டம் ஒருமைப்பாட்டை உணர்த்தும்

மானிப்பாய், மே 1

பாடசாலைகளில் நடைபெறும் காலை நேரக் கூட்டம் மாணவரிடையே அப்பாடசாலையின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் உணரவைக்கும் ஒரு கருவி ஆகும். அத்துடன் உறுதியான தேசபற்றையும்உயர்ந்த இலட்சியங்களையும் பிள்ளைப் பருவத்திலிருந்தே மாணவரிடையே இது உருவாக்குகின்றது.

கல்வி அமைச்சின் செயலாளர் திரு. இ. எல். விஜயமான இவ்வாறு அறிவித்துள்ளார்.

கூட்ட ஆரம்பத்தில் தேசியக்கொடி ஏற்றப்படவேண்டும் என்றும் மாணவர் தத்தம் சமயமுறைப்படியான பிரார்த்தனைகளில் ஈடுபடவேண்டும் என்றும் அவர் அறிவித்துள்ளார். (ச-90)


## வெளிநாடுகளில் உயர்கல்வி

இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ்சலாந்து, டென்மார்க், சுவீடன், நோர்வே, பின்லாந்து, ஒல்லாந்து, இத்தாலி, அமெரிக்கா, கனடா, மெக்சிக்கோ அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலும் இந்தியா, தாய்லாந்து, மலேசியா, பிலிப்பைன்ஸ், யப்பான் ஆகிய ஆசிய நாடுகளிலுள்ள கல்லூரிகளிலும் சர்வகலாசாலைகளிலும், தொழில் நுட்பக் கல்லூரிகளிலும், அனுமதி பெற விரும்பும் மாணவர்களும், ஆங்கில அறிவுடைய ஐம்பத்திஐந்து வயதிற்குட்பட்ட முதியோர்களும் அனுமதி பெற ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். ஏற்கனவே மேற்கூறிய நாடுகளில் வசிக்கும் இலங்கை மாணவர்கள் உயர்கல்வி பெற விரும்பினால் புலமைப் பரிசில்களும். வட்டி குறைந்த கடன்களும், வேலை செய்து படிக்கும் வாய்ப்புகளும் அந்த அந்த நாட்டில் பெற ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

**விபரங்களுக்கும், விண்ணப்பப்படிவத்திற்கும் முத்திரையுடைய சுயவிலாசமிட்ட, தபால்உறை அனுப்பி தபால்மூலம் மட்டும் பெற்றுக் கொள்ளவும்.**

*RAVI,*
**43/35. Bonjeon Road,**
**Colombo - 13.**
(10785)



## WANTED

Wanted a young energetic person to do business promotion work for a leading organisation in Jaffna. The applicant should be a resident of any one of the following areas:

1. Chankanai
2. Pandaterupou
3. Mathagal
4. Manipay

Salary negotiable. Applicant who owns motor-cycle is preferable. Apply before 05. 05. 89 to:

No: 503,
C/o UTHAYAN
Jaffna.
[332]



## ★ வாழ்த்துகின்றோம் ★

மன்னார், தாழ்வுப்பாடு
புனித சூசையப்பர் ஆலய திறப்பு விழா நடைபெறும்
இந்நன்னாளில் (01-05-89 வைகாசித் திங்கள் முதலாம் நாள்)
தாழ்வுப்பாடு, சேப்காபுரம் வாழ் மக்கள்
அனைவருக்கும்
இப்பங்கின் பங்குத் தந்தைக்கும்
எமது
**உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.**

**பெர்ணதேத் ரான்ஸ்போட் ஸ்தாபனம்**
சவுத்பார், மன்னார்.

சகோதர நிறுவனம்:

**பிரான்சிஸ் என்ரபிறைசஸ்**
S - 8, 2ஆவது மாடி,
மத்திய கொழும்பு சந்தைத் தொகுதி,
கொழும்பு - 11
[329]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:**

மையறி யாமை யுடைத்தே பொருள் கொடுத்து
மெய்யறி யாமை கொளல்'

**பொருள்:**

விலைப்பொருள் கொடுத்துக் கள்ளுண்டு தன் உடம்பைத்தான் அறியாத நிலையை மேற்கொள்ளுதல், செய்வது இன்னதென்று அறியாத அறியாமையுடையதாகும்.


# உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
1 - 05 - 1989 த. பெ. இல: 23


# மே தினத்தில் வித்திடுக!

இன்று மே தினம். மேதினி எங்கும் வாழும் தொழிலாளர்கள், உழைப்பாளிகள் உவகையுடன் கொண்டாடும் சிறப்புத் திருநாள். தங்களுக்கு எட்டு மணி நேர வேலை என்ற உரிமை கிடைத்ததை நினைவு கூர்ந்து கொண்டாடும் நல்ல நாள்.

எட்டு மணி நேர வேலை என்ற உரிமை கிடைத்ததைத் தொடர்ந்து, கடந்த நூறுண்டுகளில் உலகத் தொழிலாளர்களுக்கு மேலும் நூற்றுக்கு மேற்பட்ட உரிமைகளும் சலுகைகளும் வசதிகளும் கூடக் கிடைத்து விட்டன.

ஆனல் முன்னேறி வரும் உலகத்தில், வளர்ந்து வரும் மனித சமுதாயத்தில், தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள் இன்னும்பலப்பல உண்டு. தொழிலாளர்கள் தமக்குரிய அடிப்படை உரிமைகள் பலவற்றையும் அனுபவிக்க முடியாத சூழ்நிலைகள், அரசியல் பின்னணிகள் என்பன பல நாடுகளிலும் நிலவுகின்றன.

அதனல் மேதினத்தை தமக்கு வேண்டிய உரிமைகள் வசதிகளை வலியுறுத்தி, அவை சம்பந்தமான கோரிக்கைகளை முன் வைத்து உரிமைக் குரல் எழுப்பும் நாளாகவும் தொழிலாளர்கள் பயன் படுத்துவது உண்டு.

உழைக்கும் மக்களின் சக்தியினல் தான், உலகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. ஆனல் உழைப்பாளிக்கு உரிய உரிமைகளும், மதிப்பும், அங்கீகாரமும், கௌரவமும் வேண்டிய அளவில் இன்னும் வழங்கப்பட்டதாக இல்லை,

உழைப்பாளிக்கு, தொழிலாளிக்கு ஏனையவர்களுடன் சம அந்தஸ்து, சம உரிமை, சம மதிப்புக் கொடுக்கும் பரந்த நிலைப்பாடு இன்னும் பல நாடுகளில் வளரவில்லை. தொழிலாளர்களைத் தரம் குறைத்துப் பார்க்கும், பண்பற்ற தன்மையே உலகில் பரவலாகக் காணப்படுகிறது.

இந்த வர்க்க பேத நிலைமை, நாடுகளின் பொருளாதார, அரசியல் வளர்ச்சிகளுக்கும் பெரும் குந்தகம் விளைவித்து வருகிறது. எனினும் அதனை முற்ருக உலகில் இருந்து ஒழித்து விட முடியவில்லை.

பல நாடுகளில் தொழிலாளர்களின் உரிமைகளை, நலன்களை நன்ருகப் பேணும் விதத்தில் சக்தி வாய்ந்த சட்டங்கள் வேண்டிய அளவில் இல்லை. சட்டங்கள் உள்ள நாடுகளிற் கூட அவை சரிவர அமுல் செய்யப்படுவதில்லை; சில வேளை மீறப்படுகின்றன அல்லது அவற்றுக்கு 'டிமிக்கி' கொடுக்கப்படுகிறது.

உழைப்பவர்களை, தொழிலாளர்களை அடிமை நிலையில் வைத்திருந்து அவர்களின் உரிமைகளையும், சுதந்திரங்களையும் பறித்து, அடக்கி ஒடுக்க வேண்டும் என்ற எண்ணங் கொண்டவர்கள் அநேகமாக எல்லா நாடுகளிலும் இருக்கவே செய்கிருர்கள்.

அதனல் தொழிலாளர்கள், உழைக்கும் வர்க்கத்தினர் இன்னும் தமது உரிமைகளுக்காகப் போராடும் நிலை தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

மனிதன் அடுத்த மனிதனை வர்க்கம் பிரித்துப் பார்க்கும் வரை உரிமைப் போராட்டங்கள் உலகில் ஓயப்போவதில்லை. அதிகார வெறியும், அடக்குமுறையும் இருக்கும்வரை கிளர்ச்சிகளும், புரட்சிகளும் குறையப்போவதில்லை, சமத்துவமும்: சமநீதியும் உலகில் உள்ள ஒவ்வொரு பிரசைக்கும் எட்டும்வரை மறுமலர்ச்சிப் பூக்கள் பூக்கப் போவதில்லை.

மனிதனே மனிதனுக்குள்ளே வேற்றுமைகளை ஏற்றத் தாழ்வுகளை, பேதங்களை: பிரிவுகளை, குலங்களை, சாதிகளை, வர்க்கங்களை உண்டாக்கி சண்டை போட்டு, போராட்டங்கள், கிளர்ச்சிகள், புரட்சிகள் நடத்துகிருன், அவற்ருல் அழியவும் செய்கிருன்.

இந்த நிலை நீங்க எல்லோரும் ஒரே குலம், உலகம் ஒன்று என்று, யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்று, எண்ணிச் செயற்படும் பக்குவம் மனிதனுக்கு வரவேண்டும். அதுவே உலக மாந்தருக்கு இப்போதைய அவசிய தேவை. உலகத் தொழிலாளர் திருநாளாகிய மே தினத்தில் அந்த எண்ணத்துக்கும், செயலுக்கும் ஒவ்வொருவரும் தமது மனதில் வித்து ஊன்றுவார்களாக.

# கரேன் இனக் கிளர்ச்சியாளர்கள் பர்மாவில் திடீர்த் தாக்குதல்!

## 7 பேர்பலி; 99 வீடுகள் எரிப்பு

ரங்கூன், ஏப்ரல் 30

பர்மாவின் எல்லை நகரான மயாவடியில் கரேன் இனகிளர்ச்சியாளர்கள் திடீர்தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

200 வரையான கிளர்ச்சிக்காரர்கள் நகரினுள் புகுந்து சரமாரியாகச் சுட்டனர். வாகனங்களைச் சேதமாக்கினர். வீடுகளை எரித்தனர்.

இரண்டு மணித்தியாலங்கள் வரையில் இத்தாக்குதல் நீடித்தது.

கரேன் தேசிய யூனியனைச் சேர்ந்த கிளர்ச்சியாளர்களே இத்தாக்குதலை நடத்தியதாக பாதுகாப்பு அமைச்சில் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் லெப்டினன்ட் ஜெனரல் தான்ருன் தெரிவித்தார்.

இத் தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டனர். 99 வீடுகள் எரிக்கப்பட்டன. 30 வாகனங்கள் சேதமாக்கப்பட்டன. இறந்தவர்களில் தாய்லாந்து பிரசையும் ஒருவர்.

தீவிரவாத பாடல்களை ரங்கூன் வீதிகளில்பாடிக்கொண்டு சென்ற 21 இளைஞர்கள் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டனர் என்றும் லெப்டினன்ட் ஜெனரல் தான்ருன் சொன்னர்.

கரேன் கிளர்ச்சியாளர்கள் எல்லைப்புற நகரான மயாவடி மீது தான் அடிக்கடி மோட்டார்த் தாக்குதலை நடத்தி வந்திருக்கின்றனர். [எ]

# கர்நாடக சட்டசபைக்கு எப்போது தேர்தல்?

## பிரதமர் காந்தி பதில்

பெங்களூர், ஏப்ரல் 30

கர்நாடக சட்டசபைத் தேர்தல் கவர்னரின் சிபாரிசு கிடைத்தவுடன் நடத்தப்படும் என்று பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று தெரிவித்தார்.

பெங்களூரில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் பிரதமர் இத்தகவலை தெரிவித்தார்.

கர்நாடக அரசு பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. நெருக்கடியைச் சமாளிக்க ஆளுநர் ஆட்சி நடவடிக்கை எடுக்கும் என்றும் பிரதமர் சென்னர். (எ)

# சீன அரசு -மாணவர் பேச்சு முதல்தடவையாக ஆரம்பம்!

பீகிங், ஏப்ரல் 30

முதல் தடவையாக மாணவர் அமைப்புக்களுடன் சீன அரசு நேற்றுப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தது.

கூடுதல் ஜனநாயகம், ஊழல் ஒழிப்பு ஆகியவற்றை வற்புறுத்தி பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்கள் கடந்த சில தினங்களாக பீகிங்கிலும் மற்றும் நகரங்களிலும் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளை நடத்தி வந்தமை தெரிந்ததே.

அதைத் தொடர்ந்தே பேச்சுக்களுக்கு வரும்படி மாணவர் அமைப்புக்களை சீன அரசு அழைத்திருக்கிறது. (எ)

# செனகலில் நீடிக்கும் பதற்றம் உயிரிழப்பு 38 என அறிவிப்பு

## மொரிட்டானியர் வெளியேற்றம்

டாக்கர், ஏப். 30

அவசரகாலச் கட்டம் பிரகடனம் செய்யப்பட்டதை எதிர்த்து செனகல் நாட்டின் தலைநகர் டாக்சரில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பேரணி நடத்தினர்கள்.

இதனிடையில் செனகல் நாட்டினர் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த மொரிட்டானியரின் எண்ணிக்கை 38 ஆக அதிகரித்ததாக அரசுச் செய்தி கூறுகிறது. உத்தியோகப்பற்றற்ற செய்திகளின் படி 100க்குமேற்பட்டோர் உயிரிழந்திருக்கலாம்என்றுதெரிகிறது.

இதேவேளை, செனகலில் உள்ள மொரிட்டானியப் பிரசைகளை ஏற்றி மொரிட்டானியாவில் இறக்குவதில் விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டு உள்ளன.

சுமார் 15 ஆயிரம் மொரிட்டானியர்கள் செனகலில் அகதிகளாக பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். (எ)

# கர்நாடகத்தில் ஜனதா தள் தலைவர்கள் உண்ணுவிரதம்

பெங்களூர், ஏப்ரல் 30

கர்நாடக அரசு கலைக்கப்பட்டது தொடர்பாக முன்னுள் முதலமைச்சர்களாக எஸ். ஆர். பொம்மையும் ராமகிருஷ்ண ஹெக்டேயும் நேற்று முன்தினம் ஒருநாள் அடையாள உண்ணுவிரதம் இருந்தனர்.

ஜனதாதள் மாநில அரசு கலைக்கப்பட நாமும் ஒரு வழியில் காரணமே என்று அவர்கள் இருவரும் காரணம் காட்டினர்.

ஜனதாதள் கட்சியில் ஒற்றுமை ஏற்பட்டு அடுத்த தேர்தலில் ஆட்சியைப் பிடிக்க சகல சக்திகளையும் ஒன்று திரட்டும் நோக்குடன் இந்த அடையாள உண்ணுவிரதம் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ)

# துருக்கியில் மேதினப் பேரணிக்குத் தடை

அங்காரா, ஏப்ரல் 30

தடையை மீறி மேதின பேரணிகள் நடத்தினுல் சடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று துருக்கி அரசு அறிவித்திருக்கிறது.

துருக்கியில் மேதினக்கொண்டாட்டங்கள் சட்டபூர்வமாக அரசினுல் தடைசெய்யப்பட்டுள்ளது.

சட்டத்தை மீறும் எவரும் தடுக்கப்படுவர் என்று துருக்கி பிரதமர் டோர்கட் ஓஸல் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியான சமூக ஜனநாயக மக்கள் கட்சி மேதினப் பேரணிகளை நடத்தப் போவதாக அறிவித்துள்ளது. (எ)

# காங்கிரஸுடன் இணைப்பு

புதுடில்லி ஏப்ரல் 30

பஹுகுணு தலைமையிலான லோக்தள் கட்சி இந்திரா காங்கிரஸுடன் கடந்த புதன் இணைந்து கொண்டது.

திருமதி கமலா பஹுகுணு தலைமையில் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் காங்கிரஸ் அலுவலகம் சென்றனர்.

லோக்தள் கட்சியின் தலைவராக இருந்த திரு.பஹுகுணு அண்மையில் காலமானது தெரிந்ததே.

அதன் பின்னர் அவரது மனைவி திருமதி கமலா லோக்தள் கட்சித் தலைவியாக இருந்து வந்தார்.

இந்த இணைப்பினுல் உத்தரப் பிரதேச மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் செல்வாக்கு அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. [எ]

### கால் நடைகள் வெட்டப்படுவது நிறுத்தப்படாவிடில்

# வடக்கு,கிழக்கில் கால் நடைகள் முற்ருக அழியும் ஆபத்து நிலை!

## அதிகாரிகள்குழு உதயனுக்கு தகவல்

யாழ்ப்பாணம் மே 1

கால்நடைகளை இறைச்சிக்காக வெட்டுவது சிலகாலத்துக்கு நிறுத்தப்படவேண்டும். இல்லையேல் வடக்கு, கிழக்குப் பகுதியில் சகல கால் நடைகளும் அழிந்து விடும் ஆபத்து நிலை ஏற்படுவது தவிர்க்கமுடியாதாகிவிடும்.

இவ்வாறு கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் குழு ஒன்று நேற்று உதயனுக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டது.

இந்தக் குழுவில் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள உதவிப் பணிப்பாளர் அதே திணைக்களத்தைச் சேர்ந்த யாழ். மாவட்ட பணிப்பாளர், திருகோணமலை மாவட்ட மிருகவைத்தியர் உட்பட பலர் இடம்பெற்றிருந்தனர்.

தற்போது நமது பகுதியில் பரவியுள்ளது கோமாரியும், கால்வாய் நோயும் ஆகும். இதில் கால்வாய்நோய் காரைநகர், பருத்தித்துறை ஆகிய பகுதிகளிலும், கோமாரி வண்ணர் பண்ணை, ஆனைக்கோட்டை, இணுவில், பளை, சாவகச்சேரி, ''ருத்தித்துறை, அளவெட்டி, ஆகிய பகுதிகளிலும் பூதாகரமாக பரவியுள்ளன. இந்தப் பகுதியில் கடந்த இரண்டு மாதங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட மாடுகள் இறந்துள்ளன.

இந்த நோய்களைக் கட்டுப்படுத்த ஓரேவழி இறைச்சிக்காக மாடுகளை வெட்டுவது தடைசெய்யப்படுவதேயாகும் இறைச்சிக்காக வெளிமாவட்டங்களிலிருந்து மாடுகள் கொண்டுவரப்படுகின்றன இவ்வாறு கொண்டுவரும் போது நோய் கண்ட மாடுகளை இறைச்சிக்கடைக்காரர்கள் மலிவானவிலையில் வாங்கி இங்கு கொண்டுவருகிருர்கள். இதனுலேயே இந்த நோய் இங்கு பரவ வாய்ப்பு ஏற்படுகிறது; ஏற்பட்டது என்றும் சொல்லலாம்.

இவ்வாறு கொண்டுவரப்படும் மாடுகள் யாழ். பொம்மைவெளிப் பகுதியில் மேயவிடப்படுவது வழக்கம்.இதன் காரணமாக பொம்மைவெளிக்கு அண்மையில் உள்ள வண்ணர் பண்ணை, ஆனைக்கோட்டை பகுதிகளில் கூடுதலான மாடுகள் இறந்துள்ளன. எனவே இறைச்சிக்காக மாடுகளை வெட்டுவது தவிர்க்கப்பட்டால் மாடுகளை இங்கு கொண்டுவருவதும், நோயுள்ள மாடுகள் விற்கப்படுவதும் தடைப்பட்டுவிடும்.

இதனுல் இங்குள்ள கால் நடைகளுக்கு பாதுகாப்பு ஏற்படுவதுடன் நோய்கண்ட ஆடு, மாடுகளின் இறைச்சியை உண்ணுவதும் தவிர்க்கப்படும்—

இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர்

நோயுள்ள மாட்டின் இறைச்சியினுல் மனிதருக்கு நோய் ஏற்படும் என்ருல்பாலில் பாதிப்புஏற்படாதா என வினவியபோது நோயுற்ற கால்நடையிலிருந்து பாலே சுரக்காது'' என அவர்கள் பதிலளித்தனர். (ஒ-9)

# வறிய மாணவர், அங்கவீனர் வயோதிபர் கொண்ட குடும்பம்

## நவஜீவனத்துக்கு இன்று 30 ஆவது ஆண்டு

பரந்தன் நவஜீவனம் ஒரு அறநிறுவனம். அமரர்கள் ஏ. சி. தம்பிராசா போதகர், ஆங்கிலமாது சகோதரி எலிச'பெத் பேக்கர் ஆகியோரால் 1959 இல் நிறுவப்பட்ட இது மே 1ஆம்நாள் 30 ஆண்டுகளை நிறைவு செய்கிறது.

வறிய மாணவர் 195பேர், அங்கவீனர், மனநோயாளர், மோட்சப் பயணிகளான வயோதிபர்கள் 180பேர் என 375 அங்கத்தவர்கள்கொண்ட குடும்பம் இது.

இதன் பரப்பளவு 36 ஏக்கர். 32 ஏக்கர் விவசாய நிலம், கடைச்சல், ஒட்டு வேலைகள் தும்புத்தொழில், மர,கொல்ல வேலைகள், இயந்திர திருத்தல் தொழில், 800 கோழிகள் கொண்ட பண்ணை, மாட்டுப் பண்ணை என்பனவும், பெரிய அரிசி ஆலையும். பேக்கறியும் இங்கு உண்டு,

இவற்றுக்கான வேலைத்தலங்களில் இத்துறைகளில் இளைஞர்களுக்கு இலவச பயிற்சி தரப்படுகின்றது.

கிளிநொச்சிப் பிரதேச மக்களுக்கும் இந்த நிறுவனம் பெருமளவுக்கு வேலைகளைச் செய்து தருகிறது.

தருமபுரத்தில் காருண் என்ற கிளை நிறுவனமும் இதற்கு உண்டு. இதில் 50 மாணவர்கள் உள்ளனர். இங்கு 42 ஏக்கரில் விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது.

இப்பிரதேச விவசாயிகள் மீனவர், சிறு கைத்தொழிலாளர்கள் ஆகியோருக்கு கடன், மற்றும் பிற உதவிகளும் வழங்கப்படுகின்றன. இது பொருளாதாரத் தன்னிறைவு கொண்டதாக மிளிர்வதுகுறிப்பிடத்தக்கது.

சிறுவர் பராமரிப்பு நிலையம், பாலர்பாடசாலைகள் என்பன நலஜீவன சிறுவர்கல்விச் சேவைகள்.

— ப. வை. ஜெயபாலன் —

நீண்டதூரப் பயணிகள் சுற்றுலா குழுக்களுக்கும் இதுஆறுதல் தருகின்றது. சாதி மத வேறுபாடுகள் இன்றி சமதர்மப்பணியாற்றும் இதனை அமரர் அருட்திரு தம்பிராசாவின் புதல்வர்கள் கிருபானந்தராசா, குருகுலராசா என்போர் நிர்வாகிகளாக இருந்து இயக்குகின்றனர். திருமதி அருளம்மா தம்பிராசா உதவுகிருர். கல்விமான்கள், சேவையாளர்களைக் கொண்ட ஆலோசனைச் சபை இதனை நிர்வகிக்கிறது.

நாடு உயர நவஜீவனங்கள் பெருகவேண்டுமெனப்பிரார்த்திப்போமாக! [இ]

### தபாலில் வரும் காசோலைகள் அபகரிப்பு:

# பிரதம தபால் நிலையத்திலேயே மோசடிக் கும்பல் இயங்குகிறது?

கொழும்பு, மே 1

வெளிநாடுகளில் இருந்து தபாலில் அனுப்பப்படும் காசோலைகளை மோசடி செய்யும் கும்பல் ஒன்று கொழும்பு பிரதம தபால் நிலையத்தில் இயங்குவதாக கொழும்பு மோசடி புலனய்வுப் பொலீஸ் பிரிவு பொதுமக்களை எச்சரித்துள்ளது.

இதைத் தவிர்க்க வெளிநாடுகளில் உள்ள இலங்கையர் டெலக்ஸ் மூலம் இங்குள்ள வங்கிகளுக்குப் பணத்தை அனுப்பிவைக்க வேண்டும் என்று மோசடிப் புலனய்வுப் பிரிவைச் சேர்ந்த உதவிப் பொலீஸ் அதிபர் அன்ரன் தியோபிளஸ் தெரிவித்தார். [இ எ]

# ஞாயிறுவிடுமுறை

குருநகர், மே 01

ஞாயிறு விடுமுறையை குருநகர் பகுதி மீனவர்கள் பலர் கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளனர்.

# ரமழானுக்குமுன் முஸ்லிம்களுக்கு ரூ. 4000 நிவராணம் வழங்குக

மட்டக்களப்பு மே 1

ரமழான் பெருநாளுக்குமுன்னர் முஸ்லிம்களுக்கான ரூ. 4. 000 நிவாரணத்தை புனர்வாழ்வு அமைச்சு வழங்க வேண்டும்'

மட்டக்களப்பு மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு இணைப்புக் குழு கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனுப் எம். எல் ஹிஸ்புல்லாஹ் மேற்கண்டவாறு கோரிக்கையவலியுறுத்திஞர்.

இக் கோரிக்கையின் பிரகாரம் ரமழான் பண்டிகைக்கு முன்பு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுப்பதாக அரச அதிபர் திரு. கே. செல்வரத்தினம் தெரிவித்தார்.

மட்டக்களபு மாவட்டத்தில் ரூ. 4.000 நிவாரணம் பெறத்தகுதியானபலர் அதனை இன்னும் பெறவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது, (ச-21)

# தீர்க்கப்பட்டது

குருநகர், மே 1

கொழும்புத்துறை கடற்பிரதேசத்தில் அப்பகுதி மீனவர்களுக்கும் குருநகர் மீனவர்கள் சிலருக்கும் இடையில் 27 ஆம் திகதி ஏற்பட்ட பிணக்கு 28 ஆம் திகதி சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டதாகஅறியப்படுகிறது (க-51)

# பட்மளிப்பு விழா

அரியாலை, மே 1

இலங்கைக் கணக்கியல் தொழில் நுட்பவியலாளர் கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழா நாளை 2ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

ஆசிய பசிபிக் கணக்காளர் கழகத்தின் தலைவர் திரு. றெக்ஸ் அன்டேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிருர். (க - 13)

# கனகரத்தினம் ம.வி. பரிசளிப்பு

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய வைர விழாவும், பரிசளிப்பு விழாவும் மே மாதம் 3 ஆம் திகதி புதன்கிழமை காலை 9. 30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் திரு. மு. இராமலிங்கத்தின் தலைமையில் நடைபெறும்.

விழாவில்பிரதம அதிதியாக யாழ் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி சலந்துகொண்டு பரிசில்களையும் வழங்குவார்.

நிறுவுநர் நினைவுரையை யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை நிகழ்த்துவார்.

வைரவிழாச் சிறப்புரையை பல்கலைப் புலவர் திரு. க. சி. குலரத்தினம் நிகழ்த்துவார்.

விழாவில் வைரவிழா சிறப்பு மலரும் வெளியிட்டு வைக்கப்படும். (க)




மனிதனின் மீது ஷைத்தானும், மலக்குகளும் ஆட்சி செலுத்துகின்ருர்கள் ஷைத்தானின் ஆட்சியாதெனில் தீமையைக் காட்டி அச்சமூட்டுவது. அதாவது தர்மம் செய்வாயானுல் நீ ஏழையாகி விடுவாய் என்பன போன்ற நல்லவிடயங்களை செய்யாமலிருக்கத் தடுப்பது. மலக்குகளின் ஆட்சியாதெனின், நல்ல விடயங்களைச் செய்யும்படி தூண்டுவதும் உண்மையை உணர வைப்பதும் நல்ல எண்ணங்களை உள்ளங்களில் உண்டாக்குவதுமாகும். எனவே ஷைத்தானுக்கு வழிப்படுகின்றவனிடம் ஷைத்தானியத் தான குணங்களும் மலக்குகளுக்கு வழிபடுபவனிடம் மலக்குகளின் குணங்களும் பண்புகளும் காணப்படுகின்றன.

ஸஹர் முடிவு: 4-21
நோன்பு
திறக்கும் நேரம்: 6-20

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**KAILAS CATARRA OIL**

**கைலாஸ் பீனிஸ் தைலம்**

இது கண், காது மூக்கு, தொண்டை முதலியவற்றில் அரிப்பு, ஓயாத தும்மல், கண்ணீர் வடிதல், நாசியிலிருந்து இரத்தம் வருதல் போன்ற (21) வகையான பீனிஸ வகைளுக்கு நிவாரணம் தரும்.

4 அ, போத்தல் விலை ரூபா 20/

கிடைக்கும் இடம்:-

க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்

மருந்துச்சரக்கு வியாபாரம்

76, பெரியகடை யாழ்ப்பாணம். போன்: 2313

# உதயன்

01 - 05 - 1989 திங்கட்கிழமை

**தென்னை மரக்குடி எண்ணெ**

கை கால் சுளுக்கு, எலும்பு முறிவு, மூட்டு நமுவுதல், வாயு மூச்சுப் பிடிப்பு, அடிபட்ட வீக்கம் ரத்தக் கட்டு, முதுகுவலி முதலியன வற்றுக்குச் சிறந்தது.

1 சீசா போத்தல் விலை:- ரூபா 16/-

கிடைக்கும் இடம்:-

க. செ கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்

## Wanted an Executive

A manufacturing concern in Colombo requires a dynamic executive to administrate an Agency Office to be opened shortly in Jaffna.

**Candidate should be:**

(i) Fluent in English

(ii) Not less than 35 years of age,

(iii) Able to manage a team of 15 personnel

Knowledge in typing will be an added qualification. Salary negotiable but not less than Rs. 2000/- per month. Application containing comprehensive bio-data together with two non-related refrees to be sent on or before 15th May 1989 to:

**No. 505,**
C/o, UTHAYAN,
JAFFNA.

(335)

## தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த மேதினச் செய்தி

யாழ்ப்பாணம், மே 1

தமிழீழ விடுதலைப் புலிகளின் சார்பில் அதன் யாழ் மாவட்ட அரசியல் பிரிவால் விடுக்கப்பட்டிருக்கும்மேதினச் செய்தியில் தெரிவிடுக்கப்பட்டிருப்பதாவது;-

உலகின் அனைத்து விடுதலைப் போராட்டத்தை எடுத்துப் பார்த்தாலும் அதில் தொழிலாளர் பங்கு இன்றியமையாததாகவே அமைந்துள்ளது. அந்த வகையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திலும் தொழிலாளர் பங்கு விதிவிலக்கானது அல்ல.

எமது உறுதியான இலட்சியம் பாட்டாளி வர்க்கத்தின் நலனைப் பிரதிபலிக்கக்கூடிய சோசலிச தமிழீழத்தை அமைப்பதே நாம் ஸ்ரீ லங்கா இனவாதக் கொள்கையை மட்டும் தனியாகக் கொண்ட அரசுகளால் மட்டும் அடக்கப்படவில்லை. இனவாதத்துடன் முதலாளித்துவ சிந்தனை கொண்ட ஏகாதிபத்திய அடிவருடிகளான இனவாத அரசுகளாலேயே ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளோம்.

தமிழீழம் அமைந்தால் அது எம்மை இனவாதத்தின் பிடியில் இருந்து மட்டுமல்ல, முதலாளித்துவத்தின் பிடியில் இருந்தும் விடுவிக்கும்.

தொழிலாளர் தினமான இந்நாளில் சோசலிச தமிழீழத்தை அமைக்கும் வரை ஓயமாட்டோம் என உறுதி பூணுவோம். (உ)

## ஈ.என் டி.எல்.எவ் வின் மேதின அறிக்கை!

யாழ்ப்பாணம், மே. 1

ஈ. என். டி. எல். எவ் வின் சார்பில் அதன் யாழ் முகாம் பொறுப்பாளர் விடுத்திருக்கும் மேதினச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு, வேலையை இழந்த தொழிலாளர்களுக்கு மறுபடியும் வேலை கிடைக்க—

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு சுயாட்சிக்கான சகல அதிகாரத்தையும் பெற்றிட—

எம்மைப் பிளக்கும் வெலிஓயா சிங்கள குடியேற்றத்தை அகற்றிட—

தமிழ் பேசும் மக்களுக்கான பலமிக்க பாதுகாப்புப் படையினை உருவாக்கிட—

சகல பிற்போக்குவாத சக்திகளையும் இம் மண்ணில் இருந்து விரட்டியடித்து எமது மக்களுக்கு புனர்வாழ்வினை அளித்திட—

நாம் உறுதியுடன் இறுதி வரை போராடுவோம்.

—இவ்வாறு யாழ் மாவட்ட ஈ. என். டி. எல். எவ்வின் மேதின அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (உ)

## மேதினம் குறித்து 'கைஸ்' விடுத்த அறிக்கை

யாழ்ப்பாணம், மே 01

மேதினம் பாட்டாளி வர்க்கத்தின் எழுச்சித் தினமாக மட்டுமல்லாது மாணவ, இளைஞர்களின் உரிமைக்கு குரல் கொடுக்கும் தினமாகவும் அமைகிறது.

மாணவர் இளைஞர் பொது மன்றம் [கைஸ்] வெளியிட்டுள்ள மேதின அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மாணவர்கள், இளைஞர்கள்—மீதான அடக்குமுறை இன்னமும் தொடர்கின்றது. சிறிலங்கா அரசு தமிழ் பேசும் மாணவர் இளைஞர்மேல் திணித்த அடக்குமுறைக் கொள்கைகள் தற்போது புதிய வடிவங்களில் நடத்தப்படுகின்றன.

வடக்கு- கிழக்கு மலையகப் பிரதேசங்களில் அரசின் இனவாதக் கொள்கைகள் தொடர்ந்தவண்ணமுள்ளன வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்ட பாடசாலைகள் இன்றும் கட்டியெழுப்பப்படவில்லை பல பாடசாலைகள் நடைபெறுவதில்லை. பல பாடசாலைகளில் இராணுவம் நிலைகொண்டுள்ளது. மலையகத்தில் பாடசாலைகள் பல சிங்கள மயமாக்கப்படுகின்றன.

பல்கலைக்கழகங்களுக்கு திறப்பு விழா இல்லை; மூடுவிழாக்களே நடத்தப்படுகின்றன.

சர்வதேசப் பாட்டாளி தினத்தில் மாணவர் இளைஞர் பொது மன்றத்தினராகிய நாம் புதியதோர் புரட்சிகர கல்விமுறைக்கு வழி அமைப்போமாக.

இப்படி தெரிவிக்கப்பட்டிருக்கிறது. [இ-9]

## கோண்டாவிலிலும் நேற்று மோதல்

யாழ்ப்பாணம், மே 1

நேற்று மாலை சுமார் 3-15 மணியளவில் கோண்டாவில் பகுதியில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இருதரப்பினரும் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டதாக அறியவருகிறது.

இச்சம்பவத்தின் பின்னர் பொதுமக்கள் தாக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. (ஒ)

## சி. எம். யூ மேதினக் கூட்டம்

இலங்கை வர்த்தக கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் (சி. எம். யூ) வடபிரதேசக் கிளைகளின் மேதின ஊர்வலமும் பொதுக்கூட்டமும் இன்று காலை 10 மணிக்கு பரந்தனில் நடைபெறும். (க)

### அதிகாரப்-.---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின பேசுகையில்,மாகாண சபை உறுப்பினர்கள் எம். பிக்கள், அரசு அதிகாரிகள் புனரமைப்பு, புனர்வாழ்வுப் பணிகளில் ஆற்றவேண்டிய பங்குபற்றிப் பேசினார்.

அமைச்சர் விஜேரத்ன பேசுகையில், மாகாண சபைகளுக்குள்ள அதிகாரங்கள் பற்றி 13 ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் மிகத் தெளிவாகக் கூறியுள்ளது. மாகாண சபைகள்தான் அந்த அதிகாரங்களைச் சரியாகப் பயன்படுத்தவில்லை என்று கூறினார்.

அதனைத் தொடர்ந்து கூட்டத்தில் சலசலப்பு உண்டானது.

வடக்கு-கிழக்கு மாகாண சபை உறுப்பினர் திரு. நேசராசாபேசுகையில் ''அதிகாரப் பகிர்வு பற்றி பேசப்பட்டு வருகிறதே ஒழிய ஒன்றும் செயல்வடிவம் பெறவில்லை. இப்படி பேசிப் பேசியே ஐந்து ஆண்டுகள் சென்றுவிடும். அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசுவது செயல்வடிவம் பெற்றபின்னரே மாநாடுகளில் கலந்து கொள்வோம்'' என்றார்.

இதைத் தொடர்ந்து ஈ. பி. ஆர். எல். எப். இயக்கத்தைச் சேர்ந்த ஐந்து மாகாண சபை உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தனர்

ஐ. தே, க. மாகாண சபை உறுப்பினர் மஷூர் மௌலானா வெளிநடப்புச் செய்யவில்லை. எம். பி. க்கள் தொடர்ந்து கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

[அ-எ-21]

### இறைச்சிக் கடைகளை ,,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீர், மின்சாரம் போன்றவற்றிற்கு விதிவிலக்கு அளித்திருப்பதும் எமது மக்களுக்கு தெரிந்த ஒன்றே.

இன்றைய சூழ்நிலையால் தமிழீழ பிரதேசத்தில் சுகாதாரம் மிகவும் பாதிப்படைந்துஇருப்பது கவனத்தில் எடுக்கப்பட வேண்டியஒன்று வெளிநாட்டிலிருந்து படைகளுக்கு என உணவுக்குக் கொண்டுவரப்பட்ட கால்நடைகளிலிருந்து பரவிய வியாதிகளால் எமது மக்களுக்குச்சொந்தமான ஆயிரக்கணக்கான கால்நடைகள் அழிந்து போயின. கால்நடைகளால் வரும் வருமானத்தை நம்பி வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த ஆயிரக் கணக்கான குடும்பங்கள் அன்றாட வாழ்க்கை நடத்த முடியாத அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இன்று கால்நடைகளுக்குப் பரவிய நோய் மனித உயிரையே காவு கொள்ளக் கூடிய நிலைக்கு வந்துவிட்டது என்று சுகாதார பணிப்பாளரால் விடப்பட்ட அறிக்கை புறக்கணிக்கத்தக்க தொன்றல்ல.

இதனடிப்படையில் இந் நோய்கள் மக்களுக்கு பரவாமல் தடுப்பதற்காக சகல இறைச்சிக்கடைகளையும் பூட்டுமாறு யாழ். மாவட்ட [illegible] ளுராட்சி ஆணையாளரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை எமது மக்களின் நலன்கருதி வரவேற்கின்றோம்

எமது மக்களின் உயிரையும் ஆரோக்கியத்தையும் கருத்திற்கொண்டு இவ்வேண்டுகோளுக்கு ஆதரவு அளிக்குமாறு இறைச்சிக்கடை உரிமையாளர்களையும் பாவனையாளர்களையும் அன்புடனும் உரிமையுடனும் கேட்டுக் கொள்கிறோம்.

இறைச்சிக்கடைகளைப் பூட்டுவதால் இதனையே தொழிலாகக் கொண்டிருப்போர் அடையும் கஷ்டம் நாம் புரியாத ஒன்றல்ல. ஆனால் எமது மக்களின் ஆரோக்கியம் புறக்கணிக்கத்தக்கதல்ல எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பருத்தித்துறை..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டனரா என்பது தெரியவரவில்லை.

நண்பகல் 12 மணியளவில் ஊரடங்கு நீக்கப்பட்ட பின்னரும் கூட பருத்தித்துறைப் பகுதி மந்த நிலையிலேயே காணப்பட்டது. (ஒ 160)

## கொழும்பில் 11 இடங்களில்

கொழும்பில் மொத்தம் பதினொரு மேதினக் கூட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

அவற்றில் ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கூட்டம் காலிமுகத் திடலிலும்-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டம் கம்பல் பூங்காவிலும்-

ஐக்கிய சோஷலிச முன்னணியின் கூட்டம் டிமெல் பூங்காவிலும் நடைபெறும்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### திரு. வ. விசாகப்பெருமாள்

[கணக்காளர்]

மண்ணுலகில்: 02 06-1939 | முருகன் அடியில்: 01-04-1989

அன்பின் திருவுருவாய், அறிவின் சுடரொளியாய், பாசத்தின் பிறப்பிடமாய் விளங்கிய எம் குலத்தவமே! சோகக் கடலில் எம்மையெல்லாம் தத்தழிக்க விட்டு சென்றதெங்கே? ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு மீளாத்துயில்கொண்ட எங்கள் குலக்கொழுந்தே!உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பறுளயம்பதி முருகனை நாங்கள் எல்லோரும் வேண்டுகின்றோம்.

இன்று திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் குடும்பசகிதம் வருகைதந்து மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்

சகோதரரும், குடும்பத்தாரும்.

பெரியதம்பிரான் கோவிலடி,
சுழிபுரம் மேற்கு.

[337]

## கண்ணீர் அஞ்சலி

யாழ்/கோண்டாவில் கிழக்கு
இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்

எமது பாடசாலையில் பல்லாண்டு காலமாக ஆசிரியையாகவும், உப அதிபராகவும் கடமையாற்றி 27 - 4 - 1989 இல் மரணமடைந்த திருமதி நாகம்மா தளையசிங்கம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். அத்தோடு அன்னாரின் உற்றார் உறவினர்களுக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலை
அபிவிருத்திச் சங்கம்.

(10791)

## மரண அறிவித்தல்

### பிரம்மஸ்ரீ சி வைத்தியநாத சர்மா

197/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சி. வைத்தியநாத சர்மா காலமானார் அன்னார் சோ. சீதாராமக் குருக்கள் செல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனாவார், அன்னாரின் இறுதிக் கிரியைகள் 2-5 89 செவ்வாய்க்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று கோம்பையன்மணல் மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். தயவுசெய்து அனைவரும் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

சோ. சீதாராமக்குருக்கள்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்வம் விஞசித்தம்பி

திருமதி செல்வம் விஞசித்தம்பி அவர்கள் ஞாயிற்றுக்கிழமை சிவகதியடைந்துவிட்டார்.

மூளாயைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் அண்மையில் காலஞ்சென்ற சண்முகம்பிள்ளை விஞசித்தம்பியின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்புத் துணைவியாரும், விசாகத்திலகர் (Accountant), பொன்சோதி ஆகியோரின் அன்புத்தாயாரும், சிவபாக்கியம், தில்லைநடராசா (முகாமையாளர். C.W.E., Jaffna) ஆகியோரின் அன்பு மாமியாரும், மனோன்மணி, கனகரத்தினம், சிவபாக்கியம், சிவகெங்கை ஆகியோரின் அன்புச் சகோதரியும், பர்வதம், காலஞ்சென்ற வேலாயுதம், அமுதவல்லி, சிவசுப்பிரமணியம், தம்பிராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், யுவராசா, துங்கதிலகர், வித்தியா, திருமாதேவி, நங்கடம்ப நம்பி, மங்களமுருக நம்பி, குருதேவ நம்பி, யுகமணவாள நம்பி, இங்கிதா ஆகியோரின் அன்புப் பேத்தியாருமாவார்:

இவரின் இறுதிக் கிரியைகள் திங்கட்கிழமை 01-05-1989 மதியம் 12-00 மணிக்கு 'தில்லை வாசம்' மாதகலில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

தகவல்;

தில்லைநடராசா, விசாகத்திலகர்.

''தில்லை வாசம்'',
மாதகல்.

[10796]

### திரு. இராமேஸ்வரம் திருநாதன்

(முன்னாள் காட்டு இலாகா பரிசோதகர், மானிப்பாய்)

முன்னாள் காட்டு இலாகா பரிசோதகர் திரு. இராமேஸ்வரம் திருநாதன் அவர்கள் காலமானார்.

அன்னார் மானிப்பாயைச் சேர்ந்த காலம்சென்ற இராமேஸ்வரம் முத்தாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், நாகலட்சுமியின் அன்புக் கணவரும், கிருபாகரன் (கனடா), ராஜ்குமார் (கனடா), ரஞ்சினிதேவி (கனடா), ராஜதேவி ([illegible]) ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தி, குலத்துங்கம், இந்திராதேவி, நடராஜலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவநாதன், காலம்சென்ற அமிர்தவல்லி, சரஸ்வதி, லோகநாதன். பாலேந்திரா, விஜயராணி, யோகரட்ணம், பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சபாரட்ணம், காலம்சென்ற கனகரட்ணம், பரராஜசிங்கம், யோகரட்ணம், ஜெகராஜா, சிவஞானம், நீலகாந்தி, திருப்பதி, லோகநாயகி, குமாரசிங்கம், பரேதி ஆகியோரின் மைத்துனருமாவார்.

ஈமக்கிரியைகள் அன்னாரது யாழ்ப்பாண இல்லத்தில் செவ்வாய்க்கிழமை 02-05-1989 காலை 9-00 மணிக்கு நடைபெற்று மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

மனைவி: தி. நாகலட்சுமி

6/6, கன்னாதிட்டி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

[10799]

### திரு. கனகசபை கந்தசாமி

([illegible] முகாமையாளர், மக்கள் வங்கி, மன்னார்)

திரு. கனகசபை கந்தசாமி (உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, மன்னார்) 29. 04. 89 சனிக்கிழமை அதிகாலை 4 00 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் கனகமணியின் அன்புக் கணவரும் கலையரசி. கலையரசன், க வேந்தன், கலைப்பிரியா, கலைப்பிருந்தா ஆகியோரின் அன்புத்தந்தையும் திருமதி நாகராசா சரஸ்வதி, திரு. S. மணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் நா. தங்கத்துரை [C. T B. பரிசோதகர்] ஸ்ரீஸ்கந்தராசா, சந்திராதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் S. பரமானந்தம், S. சண்முகநாதன், அ. ஸ்ரீஸ்பரலிங்கம் [ஆசிரியர்], அ. புலேந்திரலிங்கம், அ. மகேந்திரலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 0? - 05 - 89 திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் பண்டத்தரிப்பு விளாவெளி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

அ. ஸ்ரீஸ்பரலிங்கம்.

சங்கானை கிழக்கு,
பண்டத்தரிப்பு.

[341]

### திரு. கந்தையா திருச்செல்வம்

[ஓய்வுபெற்ற R. M. P]

திரு. கந்தையா திருச்செல்வம் அவர்கள் காலமானார். அன்னார் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவகாமி [ஆசிரியை, இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்] சிவகௌரி [ஆசிரியை, கனிஷ்ட வித்தியாலயம், கிளிநொச்சி] சிவகுமாரன் [கணக்காளர், இங்கிலாந்து] சிவ அம்பிகை, சிவ ஆனந்தி. சிவரூபி, Junior Executive Rumeco Industries], சிவஜோதி [Accounts Clerk, Spam] ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்மபாலா (இ. போ. ச. கோண்டாவில்), ரவிராஜன் [Shobak Shi Group, Jeddah] சண்முகதாஸ் [Buraidah, K. S. A] ஆகியோரின் மாமனாரும், ஞானசெல்வம் [ஓய்வுபெற்ற சிறைச்சாலை அதிகாரி], சோமசுந்தரம் [ஓய்வுபெற்ற ஆசிரியர்], திருமதி பொன்னம்மா விசுவப்பிள்ளை, சங்கரப்பிள்ளை Field Officer, Upcot] ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவபாக்கியம், தர்மாவரதன் [கணக்காளர் லண்டன்], முத்துக்குமாரு [Commercial Company], மகாலட்சுமி, சரஸ்வதி [கனடா] சிவஞானம் [என்ஜினியர், லண்டன்] ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 3 - 5 - 89 புதன்கிழமை மாலை நான்கு மணிக்கு புன்னாலைக்கட்டுவனில் நடைபெறும், இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

ந. தர்மபாலா,
இளவாலை.

(10797)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 01 — 05 — 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.